

# ஸ்ரீ காமகோடி ப்ரதீபம்

ஆடி – ஆவணி

ஆகஸ்டு – 2020

மலர் 9 இதழ் 8

## பொருளடக்கம்


| | |
|---|---|
| ஆசிரியர் பக்கம் | 3 |
| வண்டு ஸ்தோத்ரம் | 6 |
| பூஜ்யஸ்ரீ சந்த்ரசேகரேந்த்ர ஸரஸ்வதி ஸங்கராசார்ய ஸ்வாமிகள் | |
| நீதிக் கதைகள் | 9 |
| பூஜ்யஸ்ரீ ஜயேந்த்ர ஸரஸ்வதி ஸங்கராசார்ய ஸ்வாமிகள் | |
| அனுக்கிரஹ பாஷணம் | 10 |
| பூஜ்யஸ்ரீ சங்கர விஜயேந்த்ர ஸரஸ்வதி ஸங்கராசார்ய ஸ்வாமிகள் | |
| தமிழ் பாகவதம் | 22 |
| ஆவணி மாத விசேஷ தினங்கள் | 24 |
| ஸ்ரீ தேவி பாகவதம் | 25 |
| தேசிய ஒருமைப்பாடு | 28 |
| வேத பாஷ்ய ரத்னம் ப்ரும்ஹஸ்ரீ வேங்கடராம கனபாடிகள் | 29 |
| மஹா பெரியவாளின் நினைவு மஞ்சரீ – 27 | 34 |
| புராணக்கதை | 36 |
| மஹிக்ஷாசுரமர்த்தினி ஸ்தோத்ரம் | 38 |
| ஸ்ரீ சாங்கர போத ரத்னாவளி | 39 |
| வேதாந்த ஸாரம் | 41 |
| மகாபாரத சுருக்கம் | 43 |
| அத்வைத வினா – விடை | 45 |
| ஜய தேவர் அருளிச் செய்த பஜகோவிந்தம் | 47 |
| ஸனாதன தர்மம் : கேள்வி பதில்கள் | 48 |

भाग्योदयेन बहुजन्मसमार्जितेन सत्संगमं च लभते पुरुषो यदा वै।
अज्ञानहेतुकृतमोहमदान्धकारनाशं विधाय च सदोदयते विवेकः।।

Man obtains the contact of saints only when the merits earned by him through many births ripen. Wisdom dawns in the wake of such contact dispersing the darkness of infatuation and arrogance which have their root in ignorance.

**நிர்வாகக் குழு**

ஸ்ரீ N. சிவராமகிருஷ்ணன்
ஸ்ரீ K. ஜயராமகிருஷ்ணன்
டாக்டர் வெங்குடி B. ரிஷிகேசன்
டாக்டர் G. சங்கரநாராயணன்







## ஸ்ரீ காமகோடி ப்ரதீபம்

**கௌரவ தலைமை ஆசிரியர் :**
டாக்டர் S. மணி திராவிட் சாஸ்த்ரி

**ஆசிரியர் குழு :**

பேராசிரியர் N.வீழிநாதன்
டாக்டர் R.கிருஷ்ணமூர்த்தி சாஸ்த்ரிகள்
பேராசிரியர் S. ஸ்ரீநிவாஸ சர்மா
ஸ்ரீ T.N. ராமசந்திரன்
ஸ்ரீ T.S. ராகவன்
பேராசிரியர் விஷ்ணுபோத்தி V.S.
ப்ரஹ்மஸ்ரீ ஸ்ரீரமண சர்மா
பேராசிரியர் ம.வே.பசுபதி
பேராசிரியர் K. ஸ்ரீநிவாஸன்

**வெளியிடுவோர் :**
ஸ்ரீ காஞ்சீ காமகோடி பீடத்தின் சார்பில்
ஸ்ரீகாமகோடி கோசஸ்தானம்

**அலுவலக முகவரி :**
ஸ்ரீ காஞ்சீ காமகோடி பீடம்
நெ.1.சாலைத்தெரு,
காஞ்சீபுரம் – 631502.
தொலைபேசி : 044 – 27233115

**மின் அஞ்சல் :**
kamakotipradeepam@gmail.com

**சந்தா விவரம்**

| | |
|---|---|
| ஒரு இதழ் | ரூ. 20/- |
| ஒரு வருடத்திற்கு | ரூ. 220/- |
| மூன்று வருடங்களுக்கு | ரூ. 600/- |
| ஐந்து வருடங்களுக்கு | ரூ. 1000/- |
| ஆயுள் சந்தா | ரூ. 5000/- |
| புரவலர் | ரூ. 10000/- |

Published by : Sri Kamakoti Kosasthanam on behalf of Sri Kanchi Kamakoti Peetam, No1, Salai Street, Kancheepuram - 631502. Ph : 044 - 27233115.

Periodicity : Monthly.

Printed at : Jaiganesh Offset, Chennai.



श्रुतिशिखरसमुत्थस्तत्त्वसंवित्प्रकाशः कलितिमिरनिवृत्त्यै कल्पमानश्चकास्तु।
शिवगुरुसुतमार्गं दीपयन् चन्द्रमौलेः शिशिरकरुणया श्रीकामकोटिप्रदीपः।।

कामकोटिप्रदीपोऽयं सतां विभ्राजतां गृहे।
यत्प्रकाशलवात्सद्यः पापध्वान्तो हतो भवेत्।।

# ஆசிரியர் பக்கம்

## நமது ஸ்வதந்தரமும் பதிக ஸம்பந்தமும்

**''தேனமர் பொழில்கொளாலை விளை செந்நெல்துன்னி**
**வளர் செம்பொன் எங்கும் நிகழ**
**நான்முகன் ஆதியாய ப்ரமபுரத்து**
**மறைஞ்யான முனிவன்**
**தானுறு கோளும் நாளும் அடியாரை வந்து**
**நலியாவண்ணம் உரைசெய்**
**ஆன சொல்மாலையோதும் அடியார்கள் வானில்**
**அரசாள்வர் ஆணை நமதே**

(கோளறு திருப்பதிகம்)

தேன் விளங்கும் பொழிலும், கரும்பாலையும், நெல் விளைச்சலும் வளரும் செம் பொன் பெருக நான்முகனால் வழிபடப் பெற்ற ஆதியாகிய ப்ரம்மாபுரத்தில் விளங்கும் வேத ஞானத்தில் வல்ல ஞான முனிவனாகிய திருஞான ஸம்பந்தர் நவக்ரகங்களாலும், இருபத்தேழு நக்ஷத்ரங்களாலாகிய நாளினாலும் அடியவர்கள் தீமையால் நலியாத வண்ணம் உரை செய்தனர். இத்தகைய இத்திருப்பதிகத்தை ஓதும் அடியார்கள் வானுலகில் அரசாளும் பேறு பெறுவர் . இது நமது ஆணை.

இப்பாடலுக்கும் நமது ஸ்வதந்தரத்திற்கும் என்ன ஸம்பந்தம் என்று வாசகர்கள் வியக்கலாம். ஸம்பந்தர் பெருமானோடு ஸம்பந்தப்பட்டுள்ளதே அதன் விசேஷம். சற்று விளக்குவோம்.

1947 ஆம் வருடம் ஆகஸ்ட் மாதம் நமக்கு சுதந்திரம் கொடுப்பதாக இங்கிலாந்து ப்ரதமர் அட்லி பண்டிதர் நேருவிடம் கூறிவிட்டார். நேருவிற்கு பதற்றம். அவர் ஒரு நாஸ்திகர். இதற்குரிய சடங்குகள் பற்றி தெரியாது. எனவே ராஜாஜியிடம் இதற்கு ஏற்பாடு செய்யுமாறு கேட்டார்.

இருப்பதோ குறுகிய காலம். பெரிய அளவில் செய்ய முடியாது. எனவே ராஜாஜி திருப்பனந்தாள் மடத்தை அணுகி ஏற்பாடுகளைச் செய்யச் சொன்னார். அவர்களும் வெள்ளி செங்கோல் ஒன்றைச் செய்து சில ஓதுவார்களுடன் அதை அனுப்பி வைத்தனர்.

அந்த நன்னாளில் ஓதுவார்கள் ஸம்பந்தப் பெருமானின் கோளறு திருப்பதிகத்தை ஓதி பண்டிதர் நேரு அவர்கள் வெள்ளிச் செங்கோலை ஆங்கிலேயர்களிடமிருந்து பெற்றுக் கொள்ளச் செய்தனர்.

சுதந்திர வைபவம் இனிதே நடைபெற்றது. இந்த காக்ஷி இன்னமும் ஸம்பந்தப்பட்ட மடத்தில் அரிய புகைப்படமாக உள்ளது. நமக்குப் இரண்டு விதத்தில் பெருமையே. ஒன்று நம் தமிழ் டில்லியில் முழங்கியது. இரண்டாவது ஸம்பந்தரின் வாக்கு. இது பற்றி விளக்குவோம்.

எத்தனையோ ஆண்களும், பெண்களும் மகாத்மா காந்தியின் வழியில் நம் நாட்டு சுதந்திரத்திற்காக பாடுபட்டனர். பல வருஷங்கள் பாடுபட்டு வாராது வந்த மணியாய் சுதந்திரம் வந்தது. ஆனால் நாடு எதிர் பார்த்த அளவுக்கு வளரவில்லை. பல துறைகளில் முன்னேற்றம் இருந்தாலும் செய்ய வேண்டியவைகளை செவ்வனே செய்யவில்லை. நம் நாடு விடுதலை பெற்ற அதே நேரத்தில் விடுதலை பெற்ற சில நாடுகள் நன்றாக முன்னேறியுள்ளன. நாம் அவ்வளவுதானா? என்னும் கேள்வி எல்லார் மனத்திலும் தோன்றுகிறது. விரக்தியும் அலைக்கழிக்கிறது.

தொய்வுக்குக் காரணம் அரசாங்கத்தின் policy decision தான். எப்படியிருப்பினும் தொய்வுகளுக்கு நடுவே பாரதம் தன்னைத் தனி அரசாகக் காட்டிக் கொண்டிருக்கிறது. சமீபகாலமாக வல்லரசாகவும், நல்லரசாகவும் மற்ற நாடுகளின் நன் மதிப்பைப் பெற்றுள்ளது.

அநேகமாக நாம் ஒரு மாபெரும் சக்தியாக வரப்போகும் காலங்களில் விளங்குவோம். ஏனெனில் அரசாணை தந்தது சம்பந்தர் வாக்கு. கோளறு திருப்பதிகமாய் வந்த வாக்கு. தீமை செய்யும் கோள்கள் நக்ஷத்ரங்கள் என்று மக்கள் மத்தியில் இருக்கும் நம்பிக்கையை அச்சத்தை போக்க அவர் செய்த உரை, பொய்யாகாத வாக்கு.

அனல் வாதம் புனல் வாதம் இப்படிப் பல இன்னல்களைத் தகர்த்து எறிந்து தீந்தமிழ் பாக்களில் தேவாரம் செய்தருளிய அவருடைய ''அடியார்கள் அரசாள்வர் ஆணை நமதே'' என்னும் திடமான வாக்கு. அவரது வாக்குப் பொய்யாகாது என்பது திண்ணம். இந்த சுதந்திர நாளில் அவரது வாக்கை மெய்யாக்க நாம் அனைவரும் பாடுபடுவோம்.

# மீடியாக்கள் மறைத்த நற்செயல்கள்

5048088 மளிகை கிட்கள், 31712767 உணவுப் பொட்டலங்கள், 22446 ரத்ததான நபர்கள், 4454555 முக கவசங்கள் 2124 404 கபசுர குடி நீர், 161005 நாடோடி மக்களுக்கு உதவி, 67336 நிவாரணப் பணி பெற்ற ஊர்கள், 342319 இப்பணியில் பணி செய்த ஸ்வயம் சேவகர்கள். இவை R.S.S கொரொனா காலத்தில் செய்த பணிகள்.

1091984 கிலோ அரிசி, 273373 கிலோ பருப்பு, 59312 கிலோ மாவு, 295902கிலோ காய்கறிகள், 59397 லிட்டர் எண்ணெய், 103035 திண்பண்டங்கள், 125822 முக கவசங்கள், 164651 பயனடைந்த குடும்பங்கள் இவை ராமக்ருஷ்ணா மிஷன் செய்த கொரோனா நிவாரப் பணிகள்.

ஸ்ரீ பால பெரியவா ஆணையின் படி ட்ரஸ்ட் ஏற்பாடு செய்து அதன் வழியாக சிறு கோயில்களில் பூஜை செய்யும் அர்சகர்களுக்கு வேண்டிய உதவி போன்ற இன்னும் பல தொண்டு நிறுவனங்கள் மிகச்சிறந்த நிவாரணப் பணியை செய்து வருகின்றன.

இவை யாவும் மீடியாக்கள் மூலமாக மக்களுக்குத் தெரியப்படுத்தப்படவில்லை என்பது விசனிக்கத் தகுந்தது. படாடோபமும் பகட்டாக காட்டி கொள்பவர்களை மீண்டு மீண்டும் காட்டிய மீடியா உண்மையாக ஊருக்கு உழைத்தவர்களை புறம் தள்ளி விட்டது. ஒரு துளி கூட இவை பற்றி சொல்லவில்லை. அறம், நற்செய்கை இவை எங்கிருந்தாலும் பாராட்ட வேண்டும். நமது மீடியாக்கள் அந்த அளவுக்கு வளரவில்லை.

பாராட்டுக்காக மேலே கூறிய நிறுவனங்கள் இதைச் செய்யவில்லை. எனினும் மக்கள் சேவை மகாதேவ சேவை என்பதை அவர்கள் நிரூபித்துள்ளார்கள். வாழ்க அவர்தம் தொண்டு. வளர்க அவர்தம் தொண்டு என்று கூறி இவ்விதழை ஸ்ரீ சரணர்களின் பொற்பாதத்தில் சமர்ப்பிக்கிறோம்.

# வண்டு ஸ்தோத்ரம்

## ஜகத்குரு பூஜ்யஸ்ரீ சந்த்ரசேகரேந்த்ர ஸரஸ்வதி சங்கராசார்ய ஸ்வாமிகள்

C ¸ Á øPa \¢u [ PÒ



**இரண்டாவது வரி, தமய மந:f சமய விஷயம் ருகத்ருஷ்ணாம்.**

த-ம-ய-ம (என்ற) ஒவ்வொன்றுக்கும் ஒரு மாத்திரை வீதம் மொத்தம் நாலு. அப்புறம் ‘‘ந:’’ என்று குறியான ‘‘ந’’ க்குப் பின்னால் விஸர்கம் வருவதால் இரண்டு மாத்திரை. நாலு ப்ளஸ் இரண்டு, அதாவது ஆறு. அப்புறம், ச-ம-ய, வி-ஷ-ய-ம்-ரு-க என்ற எட்டும் சுத்தமான குறில்கள், ‘‘ம்ரு’’ வி-ஷ-ய-ம்ரு-க என்ற எட்டும் சுத்தமான குறில்கள் ‘‘ம்ரு’’ என்பதுகூட, ‘‘உ’’ காரத்தைத் தாழ்த்திச் சொல்லும் குற்றிய லுகர வர்க்கத்தைச் சேர்ந்ததால் ஸம்ஸ்கிருதத்தில் ஒற்றை மெய்யெழுத்துக் குறில் தான். அதை ம், ர், உ ஒன்றாம் வரிக்கு 12 மாத்திரைகள்; இரண்டாம் வரிக்கு 18 மாத்திரை; நாலாம் வரிக்கு 15 மாத்திரை. பாதம் பாதமாகக் கணக்குப் பண்ணிப் பார்த்தீர்களானால் பொழுது போக்காக இருக்கும் ! உயிரெழுத்துக்களைக் கொண்டு எண்ணாமல் லகு, குரு மாத்திரை பார்த்து எண்ணினால் தான் இந்த ச்லோகங்களில் விதிப்படி ஏற்பட்ட ஒரு pattern (க்ரமம்) இருப்பதாகத் தெரியும். இல்லாவிட்டால் சீர் ஸரியில்லை என்று தோன்றிவிடும். ஆனாலும் ஆசார்யாளின் வாக்விசேஷம், ‘‘வ்ருத்த’’ ங்களுக்கே அதிகம் பழகி ‘‘ஜாதி’’ களைப் புரிந்து கொள்ள முடியாத தமக்கும் கூட, இந்த ஷட்பதீ ச்லோகங்களை நாம் சொல்கிற போதே அவற்றில் சீரில்லை என்கிற மாதிரி கொஞ்சம்கூடத் தோன்றாது. வார்த்தைகளும், சப்தங்களும் ஒன்றுக்கொன்று ரொம்பவும் இசைந்து, இந்த இரண்டும் அர்த்தத்தோடேயே இசைந்து செல்வதான அழகான போக்கிலேயே இந்த ஸ்தோத்ரம் அமைந்திருக்கிறது. குழந்தைகூட நினைவு வைத்துக் கொள்ளும்படியாக அவ்வளவு ஸுலபமாக இருக்கிறது.

பலச்ருதி மாதிரி இருக்கிற கடைசி ச்லோகத்தை விட்டுவிட்டால் இதிலே ஆறு ச்லோகங்கள் இருக்கின்றன. பல ச்ருதியும் மேலே சொன்ன அதே மீட்டரில் இருப்பது தான்.

பலச்ருதி ‘‘மாதிரி’’ தான்; அசல் பலச்ருதி இல்லை. அசல் பலச்ருதி என்றால், ‘இந்த ச்லோகத்தைச் சொல்பவருக்கு இன்னின்ன பலன்கள் உண்டாகும்’ என்று உடைத்து வ்யக்தமாகச் சொல்லியிருக்க வேண்டும். இங்கே கடைசி ஸ்லோகத்தில் அப்படிச் சொல்லவில்லை. அதைப் பற்றிப் பிறகு சொல்கிறேன். கடைசி ஸ்லோகத்தைக் கடைசியில் தானே சொல்ல வேண்டும்? முதல் ஸ்லோகத்திலிருந்து வரிசையாகச் சொல்லிக் கொண்டு போகிறேன். முதல் ஸ்லோகத்தை ஆரம்பிக்கும் முன் இப்போது டைட்டில் ‘ஷட்பதீ’ என்பது என்ன என்று சொல்ல ஆரம்பித்தேன்.

இதிலே ஆறு ஸ்லோகங்கள், பலச்ருதி நீங்கலாக உள்ளன.

அதனால் ‘ஷட்-பதீ’, அதாவது, ‘ஆறு பதங்கள் கொண்ட நூல்’ என்று ஆசார்யாள் டைட்டில் கொடுக்கிற போது, ‘பதம்’ என்றால் ஸ்லோகத்தின் ஒரு பாகம் என்று அர்த்தம் கொடுக்காமல், ஒரு முழு ஸ்லோகத்தையே ‘பதம்’ என்று குறிப்பிடுவதாகத் தெரிகிறது. ‘பதம்’ என்ற வார்த்தை பல அர்த்தத்தில் ப்ரயோகமாகிறது. வேதத்தில் ‘பதம்’, ‘க்ரமம்’, என்று சொல்லிக் கொண்டே போய் ‘கனம்’ என்பதில் முடிப்பார்கள். மந்த்ர அக்ஷரங்களைப் பல தினுஸில் மாற்றி மாற்றிக் கோத்து வாங்கிச் செல்வது தான் ‘பதம்’, ‘க்ரமம்’, ‘கனம்’ எல்லாம். கனம் வரைக்கும் தேர்ச்சி பெற்றவரைத்தான் ‘கனபாடி’ என்பது. இங்கே ‘பதம்’ என்றால் வார்த்தை வார்த்தையாகப் பிரித்துச் சொல்வது.

காற்பகுதியை மட்டுமின்றி முழு ச்லோகத்தையே ‘பதம்’ என்று குறிப்பிடும் வழக்கமும் உண்டு. ஜயதேவரின் ‘கீத கோவிந்தத்தை’ ‘அஷ்டபதி’ கள் என்கிறோமே, இங்கே பதம் என்றால் ஒரு முழு செய்யுள் – stanza என்றே ஆகிறது. தமிழில் கூட ஒரு பதிகத்தையோ, பாசுரத்தையோ குறிப்பிட்டு அதில் எத்தனை செய்யுள் இருக்கிறது? என்று கேட்பதற்குப் பதில், ‘எத்தனை அடி இருக்கிறது’ என்று கேட்கிறோம். இங்கே, ‘அடி’ என்றால் செய்யுளின் ஒரு பாகம் என்று அர்த்தமாகமால் முழு செய்யுள் என்றே ஆகிறது. இப்படியே தான் ஒரு கீர்த்தனம் என்று எடுத்துக் கொண்டாலும், நாலைந்து சரணம் இருந்தால் ‘எத்தனை அடிகள்?’ என்றே கேட்கிறோம். இதிலே இன்னொரு வேடிக்கைக்கூட! ஸ்லோகமாக இருந்தால், ‘பதம்’, ‘பாதம்’ என்கிறோம். பாட்டாக, கீர்த்தனமாக இருந்தால் ‘சரணம்’ என்கிறோம். ‘பாதம்’ என்பது போலவே ‘சரணம்’ என்றாலும் கால்தான் ‘அடி’ என்பதும் காலைக் குறிப்பது தானே?

(தொடரும்)

# நீதிக் கதைகள்

## ஜகத்குரு பூஜ்யஸ்ரீ ஜயேந்த்ர ஸரஸ்வதி சங்கராசார்ய ஸ்வாமிகள்

### சீதை
### பொறுமையின் பெருமை

மிதிலை என்னும் நகரைச் சனகர் என்னும் அரசர் ஆண்டு வந்தார். அவர் சிறந்த அறிவாளி. ஒரு நாள் வேள்வி ஒன்றினை இயற்றத் தொடங்கும் போது நிலத்தை உழுதார். அப்போது கலப்பையின் நுனி ஓரிடத்தில் தடைப்பட்டது. நிலத்தை அகழ்ந்து பார்த்த போது ஒரு பேழையில் எழில் மிக்க பெண் குழந்தை இருப்பதைக் கண்டார். அப்போது வானில் 'இவள் உன்னுடைய தர்ம புத்ரி ஆவாள்' என ஒலித்தது. அசரீரி வாக்கின்படி சனகர் அக் குழவியை எடுத்து சீதையெனப் பெயரிட்டு மிகவும் அன்பாக வளர்த்து வந்தார்.



சீதை வளர்ச்சியுற்றதும் அவளை மணந்து கொள்ள மன்னர் பலர் முன் வந்தனர். சனகர் தன் மகளுக்கு ஏற்ற சிறந்த கணவனைத் தேர்ந்தெடுக்க ஒரு வழியைக் கையாண்டார். சிவபெருமானுடைய வில் அவருடைய முன்னோர்களுக்குக் கிடைத்தது. அதனை அவ்வம்சத்தினர் போற்றிப் பாதுகாத்து வந்தனர். அவ்வில்லை வளைத்து நாணேற்றக் கூடியவருக்கே சீதை மனைவியாவாள் என்று சனகர் அறிவித்தார். போர்க் கலையை நன்கு பயின்ற மன்னர் பலர் முயன்றும் அந்த வில்லினை வளைக்கக் கூடவில்லை.

கோசல நாட்டின் மன்னன் தசரதன் அயோத்தி என்னும் தலைநகரில் இருந்தார். மகவு பெறும் பொருட்டு அவர் இயற்றிய வேள்வியின் பயனாய் அவருடைய மனைவிக்கு நால்வர் பிறந்தனர். கௌசல்யை இராமனையும், கைகேயி பரதனையும், சுமத்திரை இலக்குவனையும், சத்ருக்கனனையும் பெற்றனர். இந்நால்வரும் வசிட்ட முனிவரால் பயில்விக்கப்பட்டு கல்வி வேள்விகளிலும், போர்க்கலைகளிலும் சிறந்து விளங்கினர். விசுவாமித்திரர் என்ற முனிவர் தமது வேள்விக்குத் துணை செய்யும் பொருட்டு, இராமனையும்,

இலக்குமணனையும் அழைத்துச் சென்றார். பின்பு அவர்களை மிதிலைக்கு அழைத்து வந்தார். மிதிலையில் இராமன் சிவனாரின் வில்லை வளைத்து நாணேற்றும் போது அவ்வில் முறிந்தது. சனகரும் சீதையை இராமனுக்கு மணமுடித்துத் தந்தார். அப்போது இராமனிடம் ‘இவள் மகா பதிவிரதையாக இருப்பாள். மகா பாக்கியசாலி. உன் நிழலைப் போல் உன்னை விட்டுப் பிரியாதவள் என்று கூறினார்’

பின்பு தசரதன் கைகேயிக்குத் தந்திருந்த வரங்களின் படி, அவளுடைய ஆணைப்படி இராமன் பதினான்கு ஆண்டுகள் காட்டில் வசிக்க ஒப்புக் கொண்டான். தன்னையும் உடன் அழைத்துச் செல்லும்படி சீதை வேண்டியதை இராமன் முதலில் மறுத்தான். அப்போது சீதை தன் திருமணத்தின் போது சனகர் கூறிய வார்த்தைகளை நினைவூட்டினாள். மேலும் ‘என் தந்தை தெரியாத்தனமாக ஒரு புருஷ விக்கிரகத்தை சிலையை என் கணவனாகத் தேர்ந்தெடுத்தாரோ?’ என்று சினந்து கூறினாள். இராமன் வேறு வழியின்றி அவளை காட்டுக்கு உடன் அழைத்துச் சென்றான்.

காட்டு வாழ்க்கையில் தொடக்கத்திலேயே விரதான் என்னும் அரக்கன் தனக்கு உணவாக இராம இலக்குமணர்களைக் கவர்ந்து சென்றான். அப்போது சீதை ‘அரக்கனே ! உணவு தேவையானால் என்னைப் புசிப்பாயாக. இவர்களை விடுவி’ என்று வேண்டினாள். ஆனால் வீரர் இருவரும் அரக்கர்களை வெட்டி வீழ்த்தி மீண்டனர்.

கோதாவரி நதிக்கரையில் பஞ்சவடி என்னுமிடத்தில் பர்ணசாலை அமைத்து, இராமன், சீதை, இலக்குமணன் ஆகிய மூவரும் தங்கியிருந்தனர். இலங்கையை ஆண்டு வந்த அரக்கர் கோன் இராவணன் என்பான் தன் தங்கை சூர்ப்பனகையின் தூண்டுதலால் அங்கு வந்து மாரீசன் என்ற அரக்கனை மாயமான் வடிவத்தில் அவர்கள் விடுதியின் அருகில் உலாவச் செய்தான். சீதை அந்த மானைப் பிடித்துத் தரும்படி வேண்டவே, இராமன் அதனைத் துரத்திச் சென்றான். மாய மான் மீது இராமன் அம்பு எய்த போது மாரீசன் ‘ஆ ! இலக்குமணா!’ என்று கத்திக் கொண்டு உயிர் நீத்தான். சீதை தனக்குக் காவலாக நின்ற இலக்குமணனை இராமனுக்கு உதவியாகச் செல்லும்படி கேட்டதற்கு இலக்குமணன் செவியுற்று இது அரக்கனின் குரல் என்றும் இராமனுக்கு எந்தவித ஆபத்தும் இல்லை என்றும் உறுதியாகச் சொன்னான். சீதை அவனைப் பழித்துக் கூறி மேலும் தன் உயிரை மாய்த்துக் கொள்வதாக அச்சுறுத்தியும், இலக்குமணன் தன் அண்ணனைத் தேடிச் சென்றதும் அப்போது மறைந்து இருந்த இராவணன் துறவி வடிவத்தில் வந்து சீதையை கவர்ந்து சென்றான்.


(தொடரும்)

# அனுக்கிரஹ பாஷணம்

## பூஜ்யஸ்ரீ சங்கர விஜயேந்த்ர ஸரஸ்வதி சங்கராசார்ய ஸ்வாமிகள்

## அயோத்யா - ராம ஜென்ம பூமி பூஜை

தேனம்பாக்கம் 25ம் தேதி ஜூலை 2020



गुरुर्ब्रह्मा गुरुर्विष्णुः गुरुर्देवो महेश्वरः ।
गुरुस्साक्षात् परंब्रह्म तस्मै श्रीगुरवे नमः ।।
वक्रतुण्ड महाकाय कोटिसूर्यसमप्रभ ।
निर्विघ्नं कुरु मे देव सर्व कार्येषु सर्वदा ।
सर्वमङ्गल त्माङ्गल्ये शिवे सर्वार्थसाधिके
शरण्ये त्र्यम्बके गौरि नारायणि नमोस्तुते ।।
श्रीरामचन्द्रः श्रितपारिजातः समस्तकल्याणगुणाभिरामः ।
सीतामुखाम्बोरुहचञ्चरीकः निरन्तरं मङ्गलं आतनोतु ।।
रामाय रामभद्राय रामचन्द्राय वेधसे ।
रघुनाध्या मथुरा माया काशी काञ्ची अवन्तिका ।
पुरी द्वारवती चैव स्प्तैता मोक्षदायिकाः।।

*நம்முடைய நாட்டிலே, மோக்ஷத்தை அளிக்கக்கூடிய, ஞானத்தை அளிக்கக்கூடிய, சிறப்பான நகரங்களிலே, முதலிடத்தை பெற்றிருப்பது, அயோத்யா. முதன்மையான இடத்தை பெற்றிருப்பது, காஞ்சீ - ''முக்தி தரும் நகரேழில், முக்யமாம் காஞ்சி நகர்''.*

*இறைவன், அவ்வப்பொழுது, மக்களை காப்பதற்காக -*

परित्राणाय साधूनां विनाशाय च दुष्कृतां ।
धर्मसंस्थापनार्थाय सम्भवामि युगे युगे ।।

*என்று சொன்னப்படி, தர்மத்தை ஸ்தாபனம் செய்வதற்காக, நிலை நாட்டுவதற்காக, மக்களுக்கு, நல்ல சிந்தனையை அளிப்பதற்காக, நல்லோர்களை காப்பதற்காக, வெவ்வேறு உருவத்தை தரித்து, ஸ்வீகரித்து, இந்த பூவுலகத்திலே ஸஞ்சரிக்கிறார், அனுக்ரஹிக்கிறார்.*

அப்படித்தான், பல அவதாரங்கள் ஏற்பட்டிருக்கின்றன. அந்த வரிசையிலே, ராமாவதாரமானது, மனிதர்களை, மனிதர்களாக, வழி நடத்துவதற்காக, தர்மத்தை வாழ்நாள் முழுவதும், எப்படி அன்பாகவும், அக்கறையாகவும், செய்யவேண்டும், அன்யோன்யமாக மக்கள் பொதுவாழ்விலே ஈடுபடவேண்டும், பெரியோர்களை மதிக்கவேண்டும், பெற்றோர்களை மதிக்கவேண்டும், நல்ல ஸங்கல்பத்தோடு வாழ்க்கையை நடத்தவேண்டும், பிறருக்கு உதவிகரமாக இருக்கவேண்டும், நல்ல பணிகளுக்கு, இடையூறு இல்லாமல், நாம் உலகத்தை பாதுகாக்கவேண்டும், பொதுப்பணிகளில் ஈடுபடவேண்டும், உலகத்திலே, அமைதியும், ஸுபிக்ஷமும், ஏற்படவேண்டும், ஜீவராசிகளை, பாதுகாக்கவேண்டும், ''கோஸம்ரக்ஷணம்'' விசேஷமாக செய்யப்படவேண்டும் - இது போன்ற, நல்ல விஷயங்களை, பக்தி-ஞான-வைராக்யங்களை, இந்த உலகத்திலே, மனிதப்பிறவி எடுத்து, நடத்திக் காட்டி - ''மரியாதா புருஷோத்தமர்'', என்று சொல்வார்கள் - பெருமதிப்பிற்குரிய, ஆதர்சமான அவதாரமாக, ஆதர்ச புருஷராக, அவதார புருஷராக, அவதாரம் செய்து -

रामो विग्रहवान् धर्मः ।

அறம் என்பது, தர்மம் என்பது, சாஸ்த்ரங்கள் என்பவை, எந்த உருவத்தைக் கொண்டு நாம் பார்க்க முடியும் என்று, யோஜித்தால், ''ராமபிரான்'' - ''சக்ரவர்த்தித் திருமகன்'', என்கிற, உருவத்தை கொண்டு நாம் தர்மத்தை அறிந்துகொள்ள முடியும், பண்புகளை அறிந்துகொள்ள முடியும், என்று சொல்லப்படுகிறது.

அப்படிப்பட்ட அவதாரமாக, ''அயோத்யா'', என்று சொல்லக்கூடிய - ''ஜெயிக்க முடியாதது'', என்கிற பொருளைக் கொண்ட - அதாவது, ஸர்வ வல்லமை படைத்த, நல்ல குணங்கள் நிரம்பிய, நகரத்திலே, மஹாவிஷ்ணுவின், அவதாரமாகத் தோன்றியவர், ராமபிரான்.

அந்த ராமபிரான் தோன்றுவதற்கு முன்பாக, வைகுண்டத்திற்கு சென்று, தேவர்களெல்லாம், இந்த பூவுலகத்திலே நடைபெறக்கூடிய பல்வேறு, கஷ்ட-நஷ்டங்களை விண்ணப்பித்து, தீர்வை கோரிய பொழுது - ''நானே, இங்கு அவதாரம் செய்கிறேன் - பூவுலகத்திலே'' - என்று சொன்ன வாக்கின்படி -

सन्तापघ्नं सकल जगतां शार्ङ्गचापाभिरामम्
लक्ष्मी विद्युल्लसितमतसी पुच्छसच्छाजकायम् ।
वैकुण्ठाख्यं मुनिजनमनश्चातकानां शरण्यम्
कारुण्यापं त्रिदशपरिषत्कालमेघं ददर्श ।।

त्रिदशपरिषत् -‘‘தேவர்களுடைய ஸமூகமானது - सन्तापघ्नं सकलजगताम् । -அனைத்து உலகத்திற்கும், இருக்கக்கூடிய தாபங்களை, குறைகளை, ஏக்கங்களை போக்கக்கூடிய அந்த சக்தியை தரிசித்தது’’, என்று சொல்லுகிறார்கள்.

அந்த மஹாவிஷ்ணுவானவர், காக்கும் கடவுளான மஹாவிஷ்ணுவானவர், தசரதருக்கு புத்ரராக, அவதாரம் செய்தார்.

அந்த ராமபிரானுடைய திவ்ய மஹிமையினாலே, இந்த பூவுலகம், குறிப்பாக நம்முடைய பாரத தேசமானது, பெருமை கொள்கிறது, புகழை அடைந்திருக்கிறது, புண்யத்தை அடைந்திருக்கிறது.

எடுத்துக்காட்டான வாழ்க்கை, தர்மத்திலே பிடிப்பு கொண்ட வாழ்க்கை, பக்தியோடு சேர்ந்த வாழ்க்கை - வீரமும், விவேகமும், விஸ்வாஸமும், வினயமும், விகாஸமும், சேர்ந்த ஒரு வாழ்க்கை, அனைவருக்கும் நல்லதை செய்யவேண்டும் என்கிற, சிறந்த எண்ணம்.

அதாவது, நாரத முனிவரிடத்திலே கேட்கிறார்கள் -

कोऽन्वस्मिन् साम्प्रतं लोके गुणावान् कश्च वीर्यवान् ।
धर्मज्ञश्च कृतज्ञश्च सत्यवान् को दृढव्रत:
चारित्रेण च को युक्त: ।

என்பதாக ஒரு நீண்ட, ஒரு வர்ணனை - அதாவது, இப்படிப்பட்ட, இப்படிப்பட்ட, குணங்களை உடைய, சிறந்த மனிதர், தற்காலத்திலே யார் என்று கேள்வி கேட்கப்படுகிறது.

ஏனென்றால், உலகம் முழுவதையும் அறிந்தவர் நாரத முனிவர். எல்லா இடத்திலேயும், நல்லவர்கள், கெட்டவர்கள், எல்லா இடத்திலேயும் இவருக்கு நுழைவு உண்டு. சென்று பார்க்கக்கூடிய, அனைவரிடத்திலேயும், ஒரு -சரளமாகப் பழகக்கூடிய, பக்தியை பரப்பக்கூடியவர், நாரதர்.

அனைவர் உள்ளத்திலேயும், நல்ல சிந்தனையை உருவாக்கக்கூடியவர். அவருக்கு, உலக விவஹாரங்களைப் பற்றிய ஞானம் முழுமையாக உண்டு. ஆகவே, அவரிடத்திலே கேட்கிறார்கள்.

அவர் வால்மீகி முனிவருக்கு, சொல்லி - இது மாதிரி, ''ராமர்'', என்று ஒருவர் இருக்கிறார் - என்று சொல்லி, அவருடைய குணங்களை சொல்லத் தொடங்குகிறார். அதுதான், ''வால்மீகி ராமாயண''மாக விரிகிறது.

அந்த வால்மீகி ராமாயணமானது, பல மொழிகளிலே, இந்திய மொழிகளிலே, மற்றும் வெளிநாடுகளிலேயும், அந்த ராமாயணம் ப்ரபலமாக இருக்கிறது.

அந்த ராமனுடைய கோவில்கள், நம்முடைய தமிழ்நாட்டிலேயும் நிறைய இருக்கின்றன. ராமபிரானைப் பற்றி, த்யாகராஜ ஸ்வாமிகள் போன்றவர்கள், நிறைய கீர்த்தனங்களை எழுதி இருக்கிறார்கள்.

அந்த ராம நாம ஜபத்துனுடைய முக்யத்வமும், நம்முடைய பாரத தேசத்திலே, மிகவும் ப்ரஸித்தமாக இருக்கிறது.

அந்த ராமபிரானுடைய அபூர்வமான கோவில்கள், தமிழ்நாட்டிலே பல இருந்தாலும், பாரத தேசத்திலே பல இடங்களிலே, கோவில்கள் இருந்தாலும் - மிகவும் அழகாக இருக்கிறது, வசதியாக இருக்கிறது, நல்ல பொருள் படைத்ததாக இருக்கிறது - இப்படிப்பட்ட இடமாக இருந்தாலும், மற்றொரு இடம் - அதாவது, நம்முடைய இடமில்லாத, அந்த வேறொரு இடம் எனக்கு மனதிலே, ஆர்வத்தை ஏற்படுத்தவில்லை अपि स्वर्णम्यी लङ्का न मे लक्ष्मणा रोचते -இது போன்று ஒரு வாக்யமிருக்கிறது.

தங்கமயமான - ஏனென்றால், அங்கு விமானம் - புஷ்பக விமானம், முதற்கொண்டு, அந்த காலத்திலே, எது, அதிநவீனமாகப் பார்க்கப்பட்டதோ, எது மிக உயர்ந்த பொருளாக பார்க்கப்பட்டதோ, எல்லாம் அந்த லங்கையிலே இருந்தாலும், அன்றைய தினம், அது ராமனுடைய மனதை ஈர்க்கவில்லை. மனதிலே அது சேரவில்லை.

காரணம் என்ன சொல்லுகிறார் என்றால் - जननी जन्मभूमिश्च स्वर्गादपि गरीयसी -தாயும், தாய்மண்ணும் - நாம் பிறந்த இடமும், ஸ்வர்கத்தை விட, உயர்ந்தது, என்பது, ராமபிரானுடைய வாக்யம்.

அப்படிப்பட்ட, அவருடைய, மனதிலே இருக்கக்கூடியது, அந்த அயோத்தியைப் பற்றிய ஒரு பெருமை, நீண்ட காலமாக-மக்களுடைய, பக்தர்களுடைய, எதிர்பார்ப்பு, இருந்து வருகிறது.

அதாவது, ராமபிரான், பாலத்தை கடந்து, இலக்கை - இலங்கையை, அடைந்தார். காலத்தை கடந்து - நீண்ட காலத்தை கடந்து, பக்தர்கள், தற்பொழுது, இந்த நல்ல எண்ணத்தை - நம்பிக்கையுடன் எதிர்பார்த்து, நல்ல, நேரத்தை எதிர்பார்த்து - ராமபிரானுடைய பிறந்த இடத்திலே, நல்லதொரு கோவில் அமைய வேண்டும், என்கிற ஒரு ப்ரார்தனையுடன், பல்வேறு முயற்சிகளை செய்து, தற்பொழுது, அந்த புண்யமான இடத்திலே, கோவில் அமைப்பதற்கான முயற்சிகள், நடைபெற்றுக்கொண்டிருக்கக்கூடிய இந்த நேரத்திலே - அன்றைய தினம், பக்தர்கள் - ''ஸ்ரீ ராம், ஜெய ராம், ஜெய ஜெய ராம்'' - என்கிற இந்த ராமபிரானுடைய திவ்ய நாமங்களை, நூற்றியெட்டு -தடவை, ஜபம், பாராயணம் செய்வதும்;

நல்ல முறையிலே, தங்கு தடையின்றி, தாமதமின்றி, தீங்கின்றி, நல்ல முறையிலே அந்த ராமபிரானுடைய திவ்யமான, பவ்யமான கோவில் அமைவதற்கும், ப்ரார்தனைகளை செய்வதுடன், ஆங்காங்கு இருக்கக்கூடிய இடத்திலிருந்து, அதை ப்ரார்தனைகளிலே, ஈடுபட்டு, அந்த ராமபக்தியிலே ஈடுபடுத்திக் கொள்ள வேண்டும்.

காஞ்சீபுரத்திற்கும், அயோத்திக்கும் - காஞ்சீ மடத்திற்கும், இந்த முயற்சிகளுக்கும், ஒரு தொடர்பையும், நாம் காண முடிகிறது.

காஞ்சீபுரத்திற்கும், அயோத்திக்கும், உள்ள தொடர்பானது - அம்மனுடைய மஹிமைகளை தெரிவிக்கக்கூடிய, ''லலிதோபாக்யானம்'', என்கிற புஸ்தகத்திலே, புராணத்திலே -முப்பத்தி ஒன்பதாவது, மற்றும், நாற்பதாவது அத்யாயங்களிலே, குறிப்பிடப்படுகிறது.

அதன்படி, சூர்யவம்சத்தை சார்ந்த, தசரதர் - பங்க்திரதர் - அவருடைய கனவிலே, அம்பாள் தர்சனம் அளித்து - அதாவது, நம்முடைய இந்திய தேசத்திலே - குலதெய்வம் என்கிற ஒரு பாரம்பர்யம் இருந்து வருகிறது.

பல்வேறு குடும்பங்களிலேயும், வெவ்வேறு ஊரிலே அவர்கள் வசித்தாலும், அந்த குலதெய்வ வழிபாட்டை, அவ்வப்பொழுது, செய்துவருகிறார்கள்.

ஏதோ ஒரு கிராமமாக இருக்கலாம், எங்கேயோ வெகு தூரத்திலே இருக்கலாம் - குழந்தை பிறந்த உடனே, அங்கு சென்று, முடிகாணிக்கை செலுத்தி, அங்கு ஏதாவது செய்ய வேண்டி - அந்தந்த குடும்ப வழக்கப்படி செய்ய வேண்டிய, சிறப்பு வழிபாடுகளை செய்து, பூஜித்து வருகிறார்கள்.

அந்த சூர்யவம்சத்துனுடைய குலதெய்வமாக விளங்குவது, அம்பாள். அந்த அயோத்தியிலேயும், ஒரு அம்மன் கோவில் இருக்கிறது. அதிலே, அந்த அம்மனுடைய தர்சனத்தை, அந்த ஸ்வப்னத்திலே - அவர் கண்டு - அதாவது, காஞ்சீபுரம் என்கிற ஊருக்கு, சென்று, ஜபங்கள், ஹோமங்கள், பூஜைகளை செய்து, ஸந்தானப்ராப்தியை - வெகு நாட்களாக, வெகு வருஷங்களாக, தவமிருந்து, எதிர்பார்த்துக் கொண்டிருந்த - தசரதர் எதிர்பார்த்துக் கொண்டிருந்த, அந்த ஸந்தானப்ராப்தியை, அடையலாம் என்கிற, அந்த அம்பாளுடைய, அந்த தர்சனமானது, அவருக்கு கிடைத்து, கௌசல்யா தேவியிடம் அதை சொல்லி, அயோத்தியிலிருந்து அவர் கிளம்பி, காஞ்சீபுரத்திற்கு வந்ததாகவும், காஞ்சீபுரத்திலே வந்து, ஏழு ராத்ரிகள் - ஒரு வாரம் அவர் தங்கினதாகவும்;

அம்பாளுக்கு உரிய பூஜைகளை, வஸ்த்ரங்கள் ஸமர்பித்தல், ஹோமங்கள் செய்தல் - அங்க இருக்கக்கூடிய அறிஞர் பெருமக்களை கௌரவித்தல் - இது போன்றெல்லாம், நல்ல பணிகளையெல்லாம் செய்து - நியம-நிஷ்டைகளுடன், ஏழு ராத்ரிகள் அங்கு, தங்கியிருந்து, அம்பாளுடைய ஸ்தோத்ரத்தை அவர் செய்து, பிறகு, ஆகாசவாணியாக, அந்த அம்பாளுடைய அசரீரி வாணி - அதாவது, வாக்கு, கேட்டு - भविष्यन्ति मदंशास्ते चत्वारस्तनयानृप । - என்பதாக, ''என்னுடைய அம்சத்துடன், நான்கு குழந்தைகள் உங்களுக்கு பிறப்பார்கள்'' - என்பதாக, காமாக்ஷி அம்பாளுடைய அனுக்ரஹத்தை அவர் கேட்டுப் பெற்று - இப்படியாக, அந்த அயோத்திக்கும், காஞ்சீபுரத்திற்கும் - ஏனென்றால், பஞ்சபூத ஸ்தலங்கள்ளே - ப்ரிதிவீ க்ஷேத்ரமாக இருப்பது, காஞ்சீபுரம்.

சக்தியினுடைய வழிபாட்டிலே, பஞ்சபூதஸ்தலங்கள், என்று இருப்பதாகத் தெரிகிறது. அதிலே - ப்ரிதிவீ க்ஷேத்ரமாக விளங்குவது, அயோத்தி.

अयोध्यादिषु पीठेषु पुथिव्याधिश्वनुक्रमात् -என்பதாக, அயோத்தி என்பது - சக்தி பஞ்சபூதஸ்தலங்கள்ளே ப்ரிதிவீ க்ஷேத்ரமாக விளங்குகிறது.

இப்படியாக, தென்னாட்டிலே இருக்கக்கூடிய, தென் பகுதியிலே இருக்கக்கூடிய, காஞ்சீபுரத்திற்கும்; வடநாட்டிலே அமைந்திருக்கக்கூடிய - ஸரயூ கரையிலே, அமைந்திருக்கக்கூடிய இந்த அயோத்யா நகரத்திற்கும், ஒரு தொடர்பு இருந்து வருகிறது.

அதாவது, ராமபிரான், பிறப்பதற்கான ப்ரார்தனைகளை, செய்த இடமாக, இந்த காஞ்சீபுரம், புராணரீதியாக விளங்கி வருகிறது.

அதே போன்று, ராமபிரான் பிறந்த இடத்திலே, கோவில் அமைய வேண்டும் என்பதற்கான முயற்சிகள்ளே, நம்முடைய காஞ்சீ மடமும், அதிலே ஈடுபட்டு; நம்முடைய பெரியவர்கள், வெகு காலமாக, இந்த நல்ல பணி சிறப்பாக நடைபெறவேண்டும், என்பதற்காக, இரண்டு பெரியவர்களும், பல முயற்சிகளையும், செய்திருக்கிறார்கள்.

பல காலங்களை கடந்து வந்திருக்கிறது, இந்த முயற்சி. ஸமரஸ மார்க்கங்கள் - கண்டிருக்கிறது. அதாவது, ''ஸம மார்க்கம்'', ''ஸமர மார்க்கம்'', ''ஸம ரஸ மார்க்கம்''.

''ஸம மார்க்கம்'' - இணைந்து பேசுவோம், இணைந்து சிந்திப்போம், இணைந்து செயல்படுவோம், என்கிற ரீதியிலேயும் முயற்சிகள் நடைபெற்றிருக்கின்றன.

''ஸமரம்'' - என்றால் - யுத்தம், என்றல்ல - கடும் முயற்சிகள், தீவிர - ஆயத்தங்கள்; மக்களுக்கிருக்கக்கூடிய பக்தி-ச்ரத்தைகளை, ஒன்று சேர்த்தல் - இது போன்ற ஒரு உத்வேகத்துடன் கூடிய பணிகள், ஸமரம். அப்படியும் நடைபெற்றிருக்கின்றன.

''ஸமரஸம்'' - அதாவது - ''ஸமம்'', ''ரஸம்'' - அது ஒண்ணு. அதாவது - அனைத்திலேயும் நன்மை இருக்கிறது - அனைவரும் நம்பிக்கைக்குரியவர்கள், அனைவரும் கௌரவத்திற்கு உரியவர்கள் - என்பது.

''ஸமரஸம்'' என்பது விட்டுக்கொடுப்பது. அதாவது, ஒரு பொது நன்மைக்காக பலரும் - எப்படி ஒவ்வொரு குடும்ப வாழ்க்கையிலேயும், பல்வேறு நிலைகள்ளே ஒவ்வொருவரும், விட்டுக்கொடுத்து, அந்த குடும்பம் என்பது நடைபெறுகிறதோ - அது போன்று, அந்த முக்யத்துவத்தை கருதி, அது ஒரு இணக்கமாக, செயல்படுவது - சுணக்கம் இல்லாமல், இணக்கமாக செயல்படுவது.

இப்படி பலவேறு வழிகளை - இத கடந்த - பல வருஷங்களாக- ஆயிரத்தி தொள்ளாயிரத்தி ஐம்பதுகளிலே ஆரம்பித்த இந்த முயற்சி, எண்பதுகளிலே, தீவிரம் - அதாவது, வெகு வேகமாக முயற்சி செய்யப்பட்டு, மக்களுடைய பக்தியின் காரணமாகவும், பல பேருடைய - ''ப்ரத்யக்ஷ - அப்ரத்யக்ஷ'' - நேரடியாகவும், பல விதமான முயற்சிகள் மூலமாக, தற்பொழுது, நல்ல ஒரு, தீர்வு, காணப்பட்டு - இந்த ஸமயத்திலே, அந்த கட்டுமானப் பணிகள், நடைபெறுவதற்காக, ஏற்பாடுகள், செய்துவருகிறார்கள்.

அரசாங்கத்தின் மூலமாகவும், அவ்வப்பொழுது, பல முயற்சிகளும், தீர்வு காணுவதற்காக, முயற்சிகளும், மேற்கொள்ளப்பட்டு வந்திருக்கின்றன. பல்வேறு

அரசாங்கங்களும், இதற்கான முயற்சிகளிலே, ஈடுபட்டிருக்கிறார்கள், இதுவரையிலே.

அப்படி பலரும், நம்முடைய மஹா பெரியவர்களை, நம்முடைய புதுப் பெரியவர்களை, சந்தித்து பேசி இருக்கிறார்கள்.

அந்த விதத்திலே, ஆயிரத்தி தொளாயிரத்தி, எண்பத்தி ஒன்பது, தொன்னூறுக்குள்ளே, George Fernandes, அவர், ரயில்வேத் துறை மந்திரியாக இருந்தபொழுது, மத்திய அரசாங்கத்திலே - பஞ்ச கச்சம் கட்டிக்கொண்டு, காஞ்சீபுரத்திற்கு வந்து, மஹா பெரியவர்களை தரிசனம் செய்து, இது ஸம்மந்தமாகவும் - எல்லாம் பேசி முயற்சி செய்திருக்கிறார்.

க்ருஷ்ணகாந்த் - என்பதாக, ஆந்த்ரப்ரதேச கவர்னராக இருந்தவர் - அவருடன், இரண்டு ப்ரமுகர்கள் - ஒருவர், பீஹார் மாநில ஆளுனராக இருந்தவர், இன்னொருவர், மத்தியப் ப்ரதேச ஆளுனராக, இருந்தவர் - என்பதாக ஞாபகம்.

அப்படி, அவர்கள் இரண்டு பேரும் வந்து, தரிசனம் செய்து - இரண்டு பெரியவர்களோடையும் பேசி - அப்படி ஒரு முயற்சி, நடைபெற்றிருக்கிறது.

இன்னோரு ஸந்தர்பத்திலே, 'ஸுபோத் காந்த் ஸஹாய்' - என்பதாக ஒரு மத்திய அரசாங்கத்துனுடைய மந்திரி, அவரும் வந்து, கலந்து பேசி, சில முயற்சிகள்.

பிறகு - 'ஸஹாபுதீன்', என்று ஒருவர் - அவர் வந்து தரிசனம் செய்தார். ஸுப்ரமண்ய ஸ்வாமியுடன் சேர்ந்து வந்திர்ந்தார்.

பிறகு - அடல் பிஹாரீ வாஜ்பாய் - அவர்களுடைய ஆட்சி காலத்திலே, நம்முடைய புதுப்பெரியவர்கள், இரண்டு ஸமூகங்களின் மத்தியிலேயும், அமைதியும், புரிந்துணர்வும், ஒரு இணக்கத்துடன் கூடிய, செயல் முறையும், காணப்படவேண்டும் என்பதற்காக, அடல் பிஹாரீ வாஜ்பாய் அவர்கள் ப்ரதமராக இருந்த நேரத்திலே - பல்வேறு தரப்பை சார்ந்தவர்களோடும், கலந்து பேசி, ஒரு அமைதியான, இணக்கமான, சூழலும், சூழ்நிலையும், வருவதற்காக, பெருமுயற்சி மேற்கொண்டார்கள்.

தமிழ்நாட்டினுடைய முக்யஸ்தர்களுடைய உதவியையும் பெற்று, அந்த நேரத்திலே, அந்த பெருமுயற்சி மேற்கொள்ளப்பட்டது.

ஆயிரத்தி தொள்ளாயிரத்தி எண்பத்தி ஆறாம் வருஷம் - அந்த நேரத்திலே, மஹா பெரியவர்கள், காஞ்சீபுரத்திலே, மடத்திலே தங்கியிருந்தார்கள். புதுப்பெரியவர்கள்,

அலஹாபாத்திலே - ப்ரயாகக்ஷேத்ரத்திலே - அங்கிருக்கக்கூடிய காஞ்சீ மடத்தை சார்ந்த - சங்கர விமான மண்டபம், கும்பாபிஷேக நிகழ்ச்சி கருதி, அங்கு முகாமிட்டிருந்தார்கள்.

அந்த நேரத்திலே, February மாசம், ஒண்ணாந்தேதி வாக்கிலே, அங்கு, தர்சனத்திற்கு, திறந்து விட்ட பொழுது - ராமபிரானுடைய தர்சனத்திற்காக, கதவுகள் திறந்து, அனுமதிக்கப்பட்ட நேரத்திலே - உடனடியாக அவர்கள் - அலஹாபாத்திலிருந்து கிளம்பி, ப்ரதாப்கர் - ஸுல்தான்பூர், வழியாக, அயோத்தியை அடைந்து, ஏழாந்தேதி February, ஆயிரத்தி தொளாயிரத்தி, எண்பத்தி ஆறாம் வருஷம் - எட்டாந்தேதியும், அங்கு தங்கியிருந்து - பிறகு - ராய் பரேலீ, அமேதீ வழியாக, திரும்ப அலஹாபாத்திற்கு சென்றார்கள்.

அந்த ஏழாந்தேதி February, அவர்கள், அயோத்தியை சென்றடைந்த நேரத்திலே, இங்கிருந்து - அதாவது காஞ்சீபுரத்திலிருந்து, மஹா பெரியவர்கள், ஒரு குடையை - ஒரு குடை - நல்ல அலங்கரிக்கப்பட்ட, பட்டு வஸ்த்ரம் போத்திய, நல்ல குடை ஒன்றையும் - 'சத்ரம்', என்று பெயர் - அதையும்;

இரண்டு சாமரங்கள் - அதையும் காஞ்சீபுரத்திலிருந்து, விமானம் மூலமாக, இரண்டு பேர்களை, அனுப்பி வைத்து - புதுப்பெரியவர்கள், அயோத்தி வரும் நேரத்திற்குள், இவர்கள், அங்கு சென்றடைய வேண்டும். இங்கிருந்து, காஞ்சீபுரத்திலிருந்து அனுப்பிவைக்கப்பட்ட, சத்ரமும்-சாமரமும்-குடையும், அந்த சாமரமும், புதுப்பெரியவர்கள் மூலமாக அங்கு, பகவான் ராமசந்த்ரமூர்த்திக்கு - ராமபிரானுக்கு ஸமர்ப்பிக்கப்படவேண்டும் - என்கிற உத்தேசத்துடன், இங்கிருந்து இரண்டு பேரை - ராம மூர்த்தி சாஸ்த்ரிகள், நீலகண்ட தீக்ஷிதர் என்பதாக இரண்டு பேரை - அனுப்பி வைத்து, அவர்கள், இங்கிருந்து -Lucknow சென்று, ஒரு விமானத்தின் மூலமாக, அங்கு சென்றடைந்தார்கள்.

அந்த பத்தாம் தேதி February - ஆயிரத்தி தொள்ளாயிரத்தி எண்பத்தி ஆறாம் வருஷம், இந்த சத்ர-சாமரங்கள், ஸமர்ப்பணம் செய்யப்பட்டு, இந்த இரண்டு பேரும் அங்கேயே, ஒரு வார காலம் தங்கி, ஒருவர் - ஸ்ரீமத் வால்மீகி ராமாயணத்தை பாராயணம் செய்தும்; இன்னொருவர், துளசீ ராமாயணம் - ஹிந்தியிலே இருக்கக்கூடிய, துளசீ ராமாயணத்தை பாராயணம் செய்தும் - அந்த ஸ்ரீமடத்தின் மூலமாக அப்படி ஒரு ஏற்பாடு - மஹா பெரியவர்கள் மூலமாக, காஞ்சீபுரத்திலிருந்து, ராமபிரானுக்கு, முதல் மரியாதை, செய்யப்பட்டு; அந்த மரியாதை என்பது, நம்முடைய புதுப்பெரியவர்கள் மூலமாக, அது செய்யப்பட்டு - அப்படி ஒரு சிறப்பான ஒரு தொடர்பு.

அதற்குப்பிறகு, புதுப்பெரியவர்கள் - அங்கு இடத்தை - ஸரயூ கரையிலே - ஒரு மிகப்பெரிய இடத்தை வாங்கி, அங்கு மடம் கட்டி, அங்கு காமாக்ஷி அம்மனுடைய விக்ரஹம்-ராமபிரான், ஆதிசங்கரருடைய விக்ரஹத்தையெல்லாம் ஸ்தாபிதம் செய்து, பாடசாலை - வேதபாடசாலை, தற்பொழுது நடந்துகொண்டிருக்கிறது.

அது மட்டுமல்லாமல், சுமார், இருபது வருஷத்திற்கு முன்பாக, உள்ளூர் மக்களின் தேவைகள் என்ன? என்பதை அறிந்து - ஏனென்றால், புதுப்பெரியவர்கள், சமயப் பணியையும், சமுதாயப் பணியையும் - இரண்டையும், அவர்கள் - ஸமமாகவும், தீவிரமாகவும், செய்துவரக்கூடிய நிலையிலே - அந்த அயோத்தி மக்களுடைய, கல்வி உதவிக்காகவும், சிறு தொழில் பயிற்சிக்காகவும், அதற்காக ஒரு, நிறுவனத்தை நிறுவி, அதன் மூலம் - Tailoring Class- இன்னும் பல, Class எல்லாம் நடத்தி, அவர்களுக்கு வேலை வாய்ப்பு, சிறு தொழிலெல்லாம், வளர்ப்பதற்காகவும், இந்த முயற்சி - அதுவும் பல காலமாக.

அந்த அயோத்தி மக்களுடைய நன்மைக்காக, அந்த முயற்சியும், நடைபெற்றுக்கொண்டிருக்கிறது-நடந்துகொண்டிருக்கிறது.

இப்படி, ஆன்மீக ரீதியாகவும் சரி, மனிதநேய முயற்சியாகவும் சரி, அந்த அயோத்தியினுடைய வளர்ச்சியிலே, நம்முடைய பெரியவர்களுடைய, முயற்சிகள், பல காலமாக இருந்து வருகின்றன.

இந்த ஒரு நல்ல ஸந்தர்பத்திலே, பக்தர்களாகிய, நமக்கெல்லாம் கிடைத்த வாய்ப்பாக இந்த, நல்ல நிகழ்ச்சியை, கருதி - நம்முடைய கலாசாரம், உலகமனைத்திற்கும், பொலிவை அளித்த கலாசாரம். மனித நாகரீகத்திற்கு பெருமை சேர்த்த கலாசாரம், கலாசாரத்திற்கு பெருமை சேர்த்த ராமபிரானுடைய அவதாரம், இவைகளை மனதிலே கொண்டு - அதுவும், எதேச்சையாக, இந்த ஆகஸ்ட் ஐந்தாம் தேதி என்பது, அமைந்திருக்கிறது. புதுப்பெரியவர்களுடைய, ஜெயந்தி தினத்தன்று அமைந்திருக்கிறது.

அவர்களும், ராமரை மறக்கவில்லை, ராமரும் அவர்களை துறக்கவில்லை. ஆகவே, அந்த ராம பக்தியை நாம் மேன்மேலும் வளர்க்கவேண்டும்.

ஆயிரத்தி தொள்ளாயிரத்தி ஏழாம் வருஷம், பதிமூன்று வயதாக, நம்முடைய மஹாபெரியவர்கள், இருந்த காலத்திலே, கலவைக்காக அவர்கள் சென்று கொண்டிருந்த நேரத்திலே, காஞ்சீபுரத்திலிருந்து, கலவைக்கு - அவர்களுக்கு ஒரு -

திடீரென்று ஒரு ஆஸ்சர்யமான, இந்த செய்தி -சூசனையாகசொல்லப்பட்ட நேரத்திலே - ''இப்படி'' என்று சொல்லவில்லை - நீங்கள் திரும்ப, உங்க ஊருக்கு போக இயலாது, என்று, குறிப்பாக உணர்த்தியிருக்கிறார்கள் - அந்த நேரத்திலே, அவர்கள், செய்யத் தொடங்கியது, சொல்லத் தொடங்கியது, ''ராம நாமம்''.

அதைப் பற்றி அவர்களே, ஒரு கட்டுரையிலே, குறிப்பிட்டிருக்கிறார்கள். அதே போன்று, பல்வேறு, அந்த ஸஞ்சார ஸமயத்திலேயும், குழந்தைகள் மூலமாக, ''ராம நாம லேகனம்'' எழுதச்சொல்லி, வெள்ளிக்காசு, தங்கக்காசெல்லாம் அளித்து - இன்றைய தினமும் பலரும் - 'ஒரு லக்ஷம் ராம நாமாவை எழுதியிருக்கிறோம், ஐம்பதாயிரம் நாமாக்களை எழுதியிருக்கிறோம்' - என்றெல்லாம் கொண்டுவந்து, மடத்திற்களிக்கிறார்கள்.

அந்த ராம நாம ஜபத்தை, ராம நாம லேகன யக்ஞத்தை, நம்முடைய பெரிவர்கள் தான் ஊக்குவித்தது.

பத்ராசல ராமதாஸர் கோவில் - அங்க ராமர் கோவிலை, புனரமைத்து, கும்பாபிஷேகம் செய்யக்கூடிய நேரத்திலே, ஆயிரத்தி தொள்ளாயிரத்தி, அறுபதுகளிலே - அதாவது, அறுபத்தி ஏழு, அறுபத்தி எட்டு, அந்த நேரங்களிலே, இரண்டு பெரியவர்களும், அங்கு முகாமிட்டு, பத்ராசலக்ஷேத்ரத்திலே முகாமிட்டு, அந்த திருப்பணிகளெல்லாம் பார்வையிட்டு, கோதாவரியிலே ஸ்னானம் செய்து - அங்கு என்ன நற்பணிகளெல்லாம் செய்யப்பட வேண்டும் என்றெல்லாம், அறிவுரைகளை வழங்கியிருக்கிறார்கள்.

இப்படி, ராமபிரானுடைய க்ஷேத்ரத்தோடும், ராமர் கோவில்களோடும், பல்வேறு தொடர்புகள், இருக்கக்கூடிய இந்த ஸந்தர்பத்திலே, மேன்மேலும், நம்முடைய நாட்டிலே, பக்தி வளரவேண்டும், கலாசாரம் வளரவேண்டும்.

அனைவரும், பல்வேறு பாஷைகள், பல்வேறு நம்பிக்கைகள் இருக்கக்கூடிய இந்த நாட்டிலே, பலரும் இணைந்து, நம்முடைய நாட்டினுடைய நன்மைக்காக, மனித நாகரீகத்தை, காப்பதற்காக- பக்தியை, ஸம்ப்ரதாயங்களை, கடைபிடிப்பதற்காக- நவீனமும், ப்ராசீனமும், கலந்த ஒரு - நவ நாகரீகமும், உண்மையான நாகரீகமும், இருக்கக்கூடிய, இந்த நல்ல நாட்டிலே, நல்ல வளர்ச்சிகள் ஏற்பட்டு, ஸுபீக்ஷம் ஏற்பட்டு, 'ராம ராஜ்யம்', என்று சொல்லக்கூடிய நல்ல நிலை ஏற்பட்டு, இந்த பகுதியும் சரி - அயோத்யா - இந்த பெயர், இந்தியாவிலே இருக்கக்கூடிய பெயர், தாய்லாந்திலே இருக்கிறது. இப்படி பல இடத்திலேயும், இந்த அயோத்யா என்கிற பெயர் இருக்கிறது.

அந்த ஒரு ராமருடைய புகழ், - இப்படி, பல இடத்திலேயும், இந்த 'ராம பக்தி', வளர்க்கப்பட்டு, மேன்மேலும், நன்மைகள் பல-பொதுமக்களுக்கும், இந்திய மக்களுக்கும், கிடைப்பதற்கு, ஒரு உத்வேகத்தையும், ஒரு வழிகாட்டுதலையும், ஒரு சக்தியையும் அளிக்கக்கூடிய ஸந்தர்பமாக, இந்த நிகழ்ச்சி, சிறப்பான முறையிலே நடைபெற்று;

மேன்மேலும், நம்முடைய நாட்டிலே, பாரம்பரியம் காப்பாற்றப்பட்டு, பக்தி காப்பாற்றப்பட்டு, நல்ல நெறிகளை நாம், வாழ்க்கையிலே பின்பற்றக்கூடிய சக்தியுடன் கூடியவர்களாக- धर्मो रक्षति रक्षितः । - என்கிற விதத்திலே, அறத்தை நாம் காத்து, அந்த அறம், நம்மை காக்கும் விதமாக, நல்ல ஸந்தர்பங்கள், அமைய வேண்டும்.

ஹர ஹர சங்கர ! ஜெய ஜெய சங்கர !



# தமிழ் பாகவதம்

தொகுப்பு : வீராபுரம் சம்பத் தீக்ஷிதர்

## ஸ்ரீ க்ருஷ்ணாவதாரம்

1. எந்த ஒரு பொருளை சைவர்கள் சிவன் என்று உபாஸனை செய்கிறார்களோ, எந்த ஒரு பொருளை ப்ரமாணத்தை ஒப்புக் கொள்ளும் பௌத்தர்கள், புத்தர் என்று போற்றுகிறார்களோ! எந்த ஒரு பொருளைப் பிரம்மம் என்று வேதாந்திகள் சொல்கிறார்களோ ! எந்த ஒரு பொருளைக் கர்த்தா என்று நியாயம் படித்தவர்கள் சொல்கிறார்களோ ! எந்த ஒரு பொருளை ஸாஸனத்தை ஒப்புக் கொள்ளும் ஜைனர்கள் அருகன் என்று சொல்கிறார்களோ, எந்த ஒரு பொருளை கர்மா என்று மீமாம்சகர்கள் சொல்கிறார்களோ, அந்த ஒரு பரம்பொருள், அவரவர் தமதமதறிவிற்கேற்ப விரும்பிய பயனைத் தருகிறதோ அந்த மூவுகை நாயகனாகிய ஹரி உங்களைப் காப்பாற்றட்டும்.

2. (மீனாமாய்) எம்பெருமான் வேதங்களை வெளிக் கொணர்கிறான்: உலகைத் தாங்குகிறான் (ஆமை); பூப்பிராட்டியை கோட்டில் ஏந்துகிறான் (பூவராஹன்); அஸுரனான ஹிரண்ய கசிபுவைப் பிளக்கிறான். (ந்ருஸிம்ஹன்); மஹாபலிச் சக்கரவர்த்தியை வஞ்சிக்கிறான் (வாமனன்); க்ஷத்ரிய வம்சத்தையே அழிக்கிறான் (பரசுராமன்); புலஸ்திய வம்சத்திலே வந்த இராவணனை வெற்றி கொள்கிறான். கையில் கலப்பையை உடைய பலராமனாய் வருகிறான். கருணையைப் பொழிகிறான். (க்ருஷணன்); கொடியவர்களை அழிக்கிறான் (கல்கி) இப்படி பத்து நிலைகளைக் கொண்டிருக்கிற எம்பெருமானே உனக்கு நமஸ்காரம்.

3. பரீட்சித்; உலகுயிர்களைக் காப்பவனாகிய பகவான் யாதவ குலத்திலே அவதரித்து என்ன என்ன செயல்களைச் செய்தானோ அதை எனக்கு விரிவாகத் தாங்கள் சொல்ல வேண்டும்.

4. ‘என்னுடைய பாட்டனார்களாகிய பாண்டவர்கள், பீஷ்மாசார்யர் போன்ற பெரிய மீன்களைக் கொண்டதும், கடக்க முடியாததுமான கௌரவ ஸேனயாம் கடலை பசுவின் குளம்படியில் தங்கும் நீரைக் கடப்பது போல் எப்படி எம்பெருமானால் கடந்தார்களோ (வெற்றி பெற்றார்களோ) எந்த எம்பெருமானால் அச்வத்தாமாவால் பாதிக்கப்பட்டு தாயின் வயிற்றில் கரிக கட்டியாய் இருந்த நான், என் தாய்

சரணாகதி செய்ததானல், குருவம்ச சந்தானமாக இருக்கிறேனோ, அப்படி என்னைக் காப்பாற்றியவன் கதையைக் கேட்க விரும்புகிறேன்.'

5. சுகப்பிரம்மம் : இராஜரிஷியான பரீக்ஷித் மஹாராஜனே! உன்னுடைய பக்தியானது நன்றாகப் பண்பட்டிருக்கிறது. அதனால் தான் பகவானான வாசுதேவனாம் கண்ணன் கதையைக் கேட்பதில் அசையாத மகிழ்ச்சி உண்டாயிருக்கிறது.

6. ஸ்ரீமத் பகவத் கீதையில் பகவான் அருளியுள்ளபடி பல பிறவிகளின் முடிவில் நான் (அப்பிறவிகளின் புண்ணியத்தின் பயனாய்) ஞானம் உண்டாகி என்னை வணங்குகிறான் ஒருவன். அதிலும் வஸுதேவன் மகனாய் அவதரித்த கண்ணனே எல்லாம் என்ற எண்ணம் உள்ளவன் பிறப்பது அரிது.

7. பல பிறவிகளின் தபம், த்யானம், ஸமாதி நிலை இவைகளின் முடிவில் தான் மனிதர்களுக்கு பாபங்கள் குறைந்து, எம்பெருமான் கண்ணனிடம் அசையா பக்தி உண்டாகிறது.

8. வாஸுதேவனுடைய சரித்திரத்தைக் கேட்பது புருஷர்களையும், பெண்களையும் புனிதமாக்குகிறது. ஸ்ரீமத் பாகவதக் கதை சொல்பவர், சொல்லுங்கள் என்று கேட்பவர், சொல்லக் கேட்பவர்கள் அனைவரையும் பகவானின் ஸ்ரீபாத தீர்த்தம் போல் புனிதமாக்குகிறது.

9. ஒரு ஸமயம் இந்த பூமாதேவி, பாரம் தாங்க மாட்டாதவளாய் மனமுடைந்து, கதறுபவளாய், கருணையின் வடிவமான பிரம்மாவிடம் சென்று தன் மனக்கவலையைக் கூறினாள்.

10. பிரம்மா சொன்னார். "ஸாக்ஷாத் பகவான், பரம்பொருள், வசுதேவர் வீட்டில் அவதரிக்கப் போகிறார். அவர் மகிழும் பொருட்டு தேவலோகப் பெண்கள் ஆயர்பாடிப் பெண்கள் தோன்றட்டும்"

11. எம்பெருமான் வாசுதேவனின் அம்சமான ஆதிசேஷன் எம்பெருமானுக்கு என்றும் மகிழ்ச்சியளிக்க முன்னவராக அதாவது தமையனராக தோன்றட்டும்.

12. இப்படி பிரம்மா சொன்னபிறகு மண்ணுலகில்

யாதவ அரசனாக சூரசேனன் என்பவர் யாதவர் தலைவனாக வடமதுரையில் இருந்து கொண்டு எல்லா உலக இன்பங்களையும் அனுபவித்துக் கொண்டிருந்தான்.

(தொடரும்)

# ஆவணி மாதம்
# ஸ்ரீ மடத்தில் - விசேஷ தினங்கள்

| தேதி | கிழமை | விவரம் |
|---|---|---|
| 22/08/2020 | சனி | விநாயக சதுர்த்தி |
| 22/08/2020 | சனி | ஸாமவேத உபாகர்மா |
| 25/08/2020 | செவ்வாய் | அனுஷம் தேர் |
| 26/08/2020 | புதன் | அனுஷம் பாராயணம் |
| 27/08/2020 | வியாழன் | மூலம் தேர் |
| 28/07/2020 | வெள்ளி | ஆவணி மூலம் |
| 29/08/2020 | சனி | உத்ராடம் தேர் |
| 29/08/2020 | சனி | ஏகாதசி |
| 30/08/2020 | ஞாயிறு | துவாதசி |
| 30/08/2020 | ஞாயிறு | உத்ராடம் பாராயணம் |
| 30/08/2020 | ஞாயிறு | ப்ரதோஷ பூஜை |
| 31/08/2020 | திங்கள் | அவிட்டம் தேர் |
| 01/09/2020 | செவ்வாய் | பௌர்ணமி பூஜை |
| 01/09/2020 | செவ்வாய் | அவிட்டம் பாராயணம் |
| 02/09/2020 | புதன் | சாதுர்மாஸ்யவ்ரதஅனுஷ்டானபூர்த்தி - விஸ்வரூபயாத்ரா |
| 13/09/2020 | சனி | ஏகாதசி |
| 14/09/2020 | ஞாயிறு | துவாதசி |
| 14/09/2020 | ஞாயிறு | ஸன்யஸ்த மஹாளயம் |
| 15/09/2020 | திங்கள் | ப்ரதோஷ பூஜை |

21/08/2020, 28/08/2020, 04/09/2020 -11/09/2020
வெள்ளிக்கிழமை பூஜை

# ஸ்ரீமத் தேவி பாகவதம் - 7

பி. ஆர். கண்ணன்

**ஸ்கந்தம் 3**

*மும்மூர்த்திகளுக்கு தேவியின் அனுக்ரகம்*



ஜனமேஜயன் தேவியின் பிரபாவம் பற்றிக் கேட்டபோது, வியாஸர் ஏற்கெனவே பிரம்மா நாரதரிடம் கூறி, நாரதர் வியாஸரிடம் சொன்ன கதையை விவரித்தார். பிரளயம் முடிந்து, பிரம்மா தாமரையின்மேல் தான் வீற்றிருந்ததைப் பார்த்து, ஒருவரையும் காணாமல் குழப்பத்துடன் தாமரைத்தண்டில் பிரயாணம் செய்தார். ஒன்றும் புலப்படவில்லை. 1000 வருஷங்கள் பூமியைத் தேடியும் ஒன்றும் கிடைக்க வில்லை. அப்போது தேவியின் ஆகாசவாணி, அவரைத் தபஸ் செய்யச் சொன்னதை, பிரம்மா கேட்டு, 1000 வருஷங்கள் தாமரையில் இருந்தபடியே தபஸ் செய்தார். பிறகு ஸ்ருஷ்டித் தொழிலைச் செய்யுமாறு அசரீரி கேட்டது. உடனேயே மது கைடபர்கள் தோன்ற, விஷ்ணுவானவர் தேவியின் கிருபையினால் அவர்களை வதம் செய்தார். பிறகு, ருத்திரனும் அங்கு வந்து சேர்ந்தார். தேவி மூவரையும் தத்தம் தொழில்களைச் செய்யுமாறு பணித்தாள். பிரம்மா சொன்னார்: 'பூமி தெரியவில்லை. பஞ்சபூதங்கள் இல்லை. ஸ்ருஷ்டி செய்ய எவ்வாறு முடியும்? நாங்கள் அசக்தர்கள்.' என்று. உடனே தேவி அம்மூவரையும் ஒரு விமானத்தில் ஏற்றிச்செல்ல, விமானம் அதிவேகமாகப் பறந்தது. அப்போது மூவரும் கீழே கண்ட காட்சிகள் திகைக்க வைத்தன.

முதலில் பூமியும், அதில் ராஜாவும் பிரஜைகளும் தென்பட்டனர். பூமியே தெரியவில்லை என்று நாம் இப்போதுதானே சொன்னோம்; பூமி ஏற்கெனவே இருக்கிறது; ஸ்ருஷ்டியும் நடந்திருக்கிறது என்று அறிந்த பிரம்மாவின் வியப்பிற்கு அளவில்லை. அதன் பிறகு ஸ்வர்க்கம், இந்திராதி தேவர்கள், லோகபாலகர்கள்

தெரிந்தனர். இன்னும் கொஞ்சம் பிரயாணத்திற்குப் பிறகு, அவர்கள் பார்வையில் வேறொரு பிரம்மா, பிரம்மலோகம்; அதேபோல சிவ பார்வதியுடன் கைலாஸம், மற்றும் லக்ஷ்மி விஷ்ணுவுடன் வைகுண்டம் எல்லாம் தெரிந்தன. விமானத்திலிருந்த மூவரும் ஆச்சரியத்தின் எல்லைக்கே சென்றனர். அதன் பின்னர் விமானம் நின்றவுடன், அவர்கள் இறங்கிப் பார்க்கையில், அவ்விடம் அம்ருதசாகர மத்தியில் மணித்வீபத்தில் தேவியின் வாஸஸ்தலமென்று அறிந்தனர். மூவரும் தானாகவே ஸ்திரீ ரூபமெடுத்தனர். அங்கு மணிமண்டபத்தில் சிவாகார மஞ்சத்தின்மீது வீற்றிருந்த புவனேஸ்வரியை தரிசனம் செய்து புளகாங்கிதம் அடைந்தனர். தாம் முன்னால் நல்ல தபஸ் செய்திருக்கவேண்டும்; அதன் நற்பயனே இந்த காணக் கிடைக்காத தரிசனம் என்றார் விஷ்ணு. பிரளய ஜலத்தில் வடபத்ரசாயியாக இருந்தபோது தனக்கு தரிசனம் அளித்த தாயார் தான் இந்த தேவி என்று உணர்ந்தார் அவர். பகவதியின் பாத நகத்தில் எல்லா பிரம்மாண்டங்களும், கைலாஸம், வைகுண்டம், பிரம்மலோகம் உள்பட; பிரம்மாவின் கமலம், விஷ்ணு, மது கைடபர்கள் எல்லாரையும் தரிசித்து வியந்தனர் அவர்கள். முதலில் விஷ்ணு விஸ்தாரமான ஸ்துதி செய்தார்: 'பல லோகங்கள், பல பிரம்மாக்கள், விஷ்ணுக்கள், சிவன்கள் பார்த்தோம். எல்லாவற்றிற்கும் நீயே ஆதிகாரணம், ஆதாரம். ஸ்ருஷ்டி, ஸ்திதி, ஸம்காரம், திரோதானம் (மறைத்தல்), அனுக்ரகம் என்னும் பஞ்சக்ருத்யங்களை செய்பவள் நீயே. உன் லீலைகளை, வைபவங்களை யாரே அறிவர். ஸகல வித்யைகள், குணங்கள், சக்தி எல்லாம் நீயே. உன் தரிசனம் முன்னர் (மது கைடப வதத்திற்கு முன்னால்) என் தமோ குணத்தைப் போக்கிற்று. நீ பிரபஞ்சத்தை ஸ்ருஷ்டித்து, ஜீவர்களுக்கு சமுத்திர அலைகள் போல் ஜீவன் கொடுப்பது எப்படியாவது அவர்கள் மோக்ஷத்தை அடையட்டும் என்ற பரம கருணையினால்தான். நான் உன் பாதங்களை நமஸ்கரிக்கிறேன். எப்போதும் ஞானப்பிரகாசம் தெளிவாக இருக்கும்படி அருள்வாயாக' என்றார். **நமோ தேவி மஹாவித்யே நமாமி சரணௌ தவ ந ஸதா ஞாநப்ரகாஸம் மே தேஹி ஸர்வார்த்ததே ஸிவே ।।** விஷ்ணுவின் பிரார்த்தனை முக்திக்கு ஞான மார்க்கத்தைக் காட்டுகிறது.

அடுத்து சிவன் ஸ்துதி செய்தார்: 'தாங்களே பிரம்மா, விஷ்ணு, சிவன் இவர்களின் ஜனனி. எல்லா காரியங்களையும் செய்பவர். ஸ்திரீபாவத்துடன் தங்கள் பாதசேவையே த்ரிலோகாதிபத்தியத்தைவிட சிறந்தது. ஸகலலோகஸிஸ்ருக்ஷுரஹம் ஹரி: கமலபூஸ்ச பவாம யதாம்பிகே ந தவபதாம்புஜபாம்ஸுபரிக்ரஹம் ஸமதிகம்ய ததா நநு சக்ரிம நந தங்கள் பாததூளியை சிரஸில் தரித்தால்தான் பிரம்மாவோ, ஹரியோ, நானோ, ஸ்ருஷ்டி, ஸ்திதி, ஸம்ஹார காரியங்களைச் செய்யும் வல்லமை பெறுவோம். தபஸ்,

ஸமாதி போன்றவைகளினால் முக்தி கிட்டாது; தங்கள் பாததூளிதான் முக்தியைக் கொடுக்கும். முன்னர் எப்போதோ தாங்கள் உபதேசித்த நவாக்ஷரி மந்திரம் இப்போது தெளிவாக இல்லை. மறுபடியும் உபதேசிக்கவும்.' என்றார். (நவாக்ஷரி மந்திரம்: ஓம் **ஐம் ஹ்ரீம் க்லீம் சாமுண்டாயை விச்சே** என்பதாகும். இது போன்ற மந்திரங்கள் குருமுகமாக உபதேசம் பெற்றுத்தான் உச்சரிக்கவேண்டியவை.) மந்திரோபதேசம் பெற்று சிவன் அங்கேயே அமர்ந்து ஜபித்தார். சிவன் பிரார்த்தனையில் பாததூளி தரித்தல் என்கிற கர்மம் பிரதானமாக உள்ளது. முக்திக்கு கர்ம மார்க்கத்தைக் காட்டுகிறது.

(வளரும்)

**தர்மப்புதிர்கள்**
**ஜூலை விடைகள்**

1. பராசர பட்டர்
2. பாரத்வாஜ கோத்ரம்
3. ஆனாய நாயனார்
4. சுந்தர விடங்கர்
5. கொல்லூர் மூகம்பிகை
6. க்ருஷ்ணாமிஸ்ரர்
7. ஸதாசிவ ப்ரம்மேந்த்ரர்
8. வைஸ்வா நரன்
9. ரோஸ் பீடர் rose peter
10. சிவபுராணம்

**ஸனாதன தர்மப்புதிர்கள்**
**ஆகஸ்ட் வினாக்கள்**

1. ஹரித்வாரத்திற்கு புராணப் பெயர்?
2. நாகப்பட்டினத்தில் விளங்கும் விடங்கர்?
3. ஆந்த்ரத்தின் சிவ சம்பந்தப் பெயர்?
4. ஜோதிஷ ஸம்ப்ரதாயங்களை ஒழுங்குபடுத்தியவர்
5. தந்தையர் காலையையும் துணித்த சிவனடியார்
6. கடந்த மாதம் ஏற்பட்ட சூர்யக்ரகணத்தின் பெயர்
7. நீலகண்ட தீக்ஷிதரின் மீனாக்ஷி ஸ்தவம்
8. பொழிச்சலூரின் உணமைப்பெயொர்
9. இந்த ரிஷியை ஸ்மரித்தால் ஸர்ப்பங்களின் தொல்லை வராது
10. தமிழகத்தை புராணங்கள் எந்த கண்டமென்று கூறும்?

# தேசிய ஒருமைப்பாடு

## ஸ்ரீ ஜகத்குரு ஜயேந்திர ஸரஸ்வதி ஸ்வாமிகள் அருளுரை:

நாம் இன்றைக்குத் தேசிய ஒருமைப்பாடு என்று லௌகீகமாகச் சொல்லிக் கொண்டிருக்கிறோம். உலக வாழ்க்கையிலே, அந்த ஒருமைப்பாட்டுக்கு அடையாளமாக ஆதிசங்கரர் தெற்கு கோடியிலே, காலடியில் தோன்றினாலும், நர்மதை நதியிலே குருவை அடைந்து, காசியிலே பாஷ்யம் செய்து, பத்ரி நாராயண க்ஷேத்திரத்தில் அந்தக் கோவிலைப் புனருத்தாரணம் செய்து, நேபாளம் சென்று அங்கும் பூஜை முறைகளைச் சரி செய்தார். அதன் அடையாளமாக இன்றும் தக்ஷிணத்தில் இருந்து வரும் பூஜை முறைகளையே கடைப்பிடித்து வருகிறார்கள்.

இதைப் பார்த்தால் மொழியோ, மதமோ, பண்பாடோ இவையெல்லாம் எப்படியிருந்தாலும்கூட ஒரு சமயம், ஒரு தத்துவம், ஒரு கலாச்சாரம், - பாரதிய கலாச்சாரம் - இந்துக் கலாச்சாரம் ஒன்று என்பதை அந்தக் காலத்திலிருந்தே நமக்குக் கொண்டு வந்திருக்கிறார்கள். ஆகையினால் நாம் எல்லோரும், உலக திருஷ்டியிலே பார்த்தால்கூட தேசிய ஒருமைப்பாடு என்ற அந்த முறையிலே கூட ஆதி சங்கரரை நினைத்துக் கொள்ள வேண்டிய தேவையிருக்கிறது. தத்துவ ரீதியிலே பார்த்தாலும், அநேக மூர்த்திகளை வைத்துக் கொண்டு அது பெரிதா, இது பெரிதா, சிவன் பெரியவரா, விஷ்ணு பெரியவரா? என்று நாம் யோசனை பண்ணிக் கொண்டு இருக்கின்றோம்.

ஆதிசங்கரப் பெருமான் எல்லா மூர்த்திகளையும் ஒன்றாகப் பாவித்து, அதற்கு மேல் ஒரு பரம்பொருள் இருக்கிறது; அதனை நீ நினைத்துக் கொள். அந்தப் பரம்பொருள்தான் இத்தனைக்குள்ளேயும் ஊடுருவி நிற்கிறது என்று சொல்லியிருக்கிறார். ஆகையினாலே ஈச்வர வழிபாடு முறைகளிலேயும், பேத புத்தியில்லாமல் ஒரே பரமாத்ம திருஷ்டியைப் பார்ப்பதற்குள்ளதொரு தன்மைகளையும்; தேசிய ஒருமைப்பாட்டு நிலைகளிலேயும், வேதாந்த ரீதியிலும் உலகம் வியக்கும்படியான - போற்றும்படியான அந்த அத்வைதத்தைச் சொன்னவர் அந்த மகா புருஷர்.

அன்றைக்கு அவர் செய்த தொண்டும், அவர் ஏற்றி வைத்த தீபமும், இன்றும் பரம்பரையாக நம் நாட்டிலே இருக்கின்றன. அந்த ஜோதியினுடைய - அந்தப் பிரகாசத்தினுடைய ஒளியை நாம் எல்லோரும் பெற்று நம் வாழ்வைப் பிரகாசமாக்கிக் கொள்ள வேண்டும்.உலகம் முழுவதற்கும் ஆதி சங்கரருடைய வேதாந்த தத்துவமும், ஆதி சங்கரரும் சொந்தம். அதனாலேயே ஒவ்வொருவரும் ஆதி சங்கரருடைய தத்துவங்களைத் தெரிந்து கொண்டு அஞ்ஞானத்தைப் போக்கி, ஞான தீபத்தை மனத்திலே ஏற்றிக் கொண்டு சாந்தமாகவும், சுகமாகவும், ஆனந்தமாகவும் வாழ வேண்டும்.

***ஸ்ரீ காமகோடி ப்ரதீபம், ஜனவரி 1985***

# வேத பாஷ்ய ரத்னம்
# ப்ரஹ்மஸ்ரீ வேங்கடராம கனபாடிகள்



கடந்த 2020 ஜூலை 10ம் தேதி சுமார் மாலை 6 மணிக்கு வேத பாஷ்ய ரத்னம் ப்ரஹ்மஸ்ரீ வேங்கடராம கனபாடிகள் சிவபதம் அடைந்தார். அவர் உருவாக்கிய வேத பாஷ்ய பரம்பரை நூற்றுக்கணக்கானவர்களை கொண்டது. ஆகவே அவரது மறைவு வேத ஸம்ரக்ஷணத்திற்கு ஏற்பட்ட ஒரு பெரிய இழப்பு என்பதில் ஐயமில்லை.

ப்ரஹ்மஸ்ரீ கனபாடிகள் நமது ஸ்ரீ காஞ்சீ காமகோடி மூலாம்நாய ஸர்வஜ்ஞ பீடாதிபதிகளான இன்றைய ஸ்ரீ மஹாஸந்நிதானங்கள் ஸ்ரீமத் ஸங்கர விஜயேந்த்ர ஸரஸ்வதீ ஸ்ரீபாதர்கள் வரையிலான மூன்று குருமார்களின் பரிபூர்ண அனுக்ரஹத்திற்கும் பாத்ரமானவர்.

திருநெல்வேலி மாவட்டம் தளபதி சமுத்ரத்தைச் சேர்ந்த ஸ்ரீமான் ரங்கநாத ஐயர் ஸ்ரீமதி மீனாக்ஷி இவர்களுக்கு மகனாக 1946ல் பிறந்தார் ஸ்ரீ கனபாடிகள். ரங்கநாத ஐயரவர்கள் நமது ஸ்ரீமடத்தில் சந்த்ரமௌளீஸ்வர கைங்கர்யமும் ஸ்ரீ மஹாபெரியவர்களுக்கு பிக்ஷை கைங்கர்யமும் செய்து வந்தவர்.

ஒருமுறை அவருடன் ஸ்ரீ கனபாடிகள் தமது பாலியத்தில் 1960ம் - திருச்சிராப்பள்ளி முகாமில் ஸ்ரீ பெரியவர்களை தரிசனம் செய்தார். அப்பொழுது ஸ்ரீ பெரியவர்கள் பிறப்பித்த ஆஜ்ஞையின்படி தமது ஸ்வசாகையான க்ருஷ்ண யஜுர்வேதத்தை அத்யயனம் செய்வதற்காக நமது ஸ்ரீமடத்தின் திருவிடைமருதூர் பாடசாலைக்கு அனுப்பப்பட்டார்.

இதற்கு முன்பு திருநெல்வேலி ஜில்லா தரிசனங்கோப்பு என்ற ஊரில் சில வேத பாகங்களை அத்யயனம் செய்திருந்தார். மீதமுள்ள வேத பாகங்களை திருவிடைமருதூரில் ப்ரஹ்மஸ்ரீ ஸ்ரீநிவாஸ சாஸ்த்ரிகள் அவர்களிடம் பூர்த்தி செய்தார். பிறகு காஞ்சீபுரத்தில் வேத லக்ஷணங்களுக்காக ஸ்ரீபெரியவர்களால் துவக்கப்பட்டிருந்த பாடசாலையில் ப்ரஹ்மஸ்ரீ ராமஸ்வாமி சர்மா அவர்களிடம் க்ரமம், ஜடை, கனம், லக்ஷணம் ஆகியவற்றைக் கற்றார்.

ப்ரஹ்மஸ்ரீ ராமஸ்வாமி சர்மா அவர்கள் தேனி மாவட்டம் மேல்மங்கலத்தை சேர்ந்தவர். அவருக்கே தமது வித்யையை பிறருக்கு அளிப்பதற்கான ஸௌகரியத்தை ஏற்படுத்திக் கொடுத்தது ஸ்ரீ மஹாபெரியவர்கள் தான் என்பது குறிப்பிடத்தக்கது. மேலும் ஸ்ரீ புதுப்பெரியவர்கள் ஆசாரமமான புதிதில் அவருடன் தர்ம சாஸ்த்ர சிந்தனம் செய்வதற்கு ஸ்ரீ மஹாபெரியவர்களால் நியமிக்கப்பட்டு ஸ்ரீ புதுப்பெரியவர்களுடன் கூட இருந்தவர் இவர்.

அத்தகையவரின் அனுக்ரஹத்துடன் அவரது சிஷ்யரான ப்ரஹ்மஸ்ரீ வேங்கடராம கனபாடிகள் நமது ஸ்ரீமடத்தின் வேத ரக்ஷண நிதி மூலம் நடத்தப்பட்ட வேத பரீக்ஷைகள், திருமலை திருப்பதி தேவஸ்தானத்தின் வேத பரீக்ஷைகள், காளஹஸ்தியில் நடந்த வேத ஸதஸ் ஆகியவிடங்களில் க்ரமாந்தம் கனாந்தம் ஆகிய பரீக்ஷைகளில் முதன்மையுடன் தேர்ச்சி பெற்றார்.

பிறகு 1970ல் ஸ்ரீ பெரியவர்களால் வேத பாஷ்ய அத்யயனம் செய்வதற்காக சிகந்தராபாதிற்கு அனுப்பப்பட்டார். அங்கு ஸந்நிதானம் ப்ரஹ்மஸ்ரீ லக்ஷ்மீநாராயண மூர்த்தி அவதானிகள், டோங்க்ரே ப்ரஹ்மஸ்ரீ வீரேஸ்வர சாஸ்த்ரிகள் இவர்களிடம் வேத பாஷ்யம், மீமாம்ஸை மற்றும் வேதாந்தம் கற்றார்.

பிறகு ஸ்ரீ கனபாடிகள் தமது பத்னி ஸ்ரீமதி ராதாவுடன் 1980களில் தனது வீட்டிலேயே ஸ்ரீ சங்கர குருகுலம் என்ற பெயருடன் 3 வித்யார்த்திகளை வைத்துக்கொண்டு உணவிட்டு போஷித்து வேத வித்யையை கற்பிக்கத்தொடங்கினார். இது படிப்படியாக விருத்தியடைந்து அங்கே 20 வித்யார்த்திகள் வரை அத்யயனம் செய்தார்கள்.

இந்த சமயத்தில் ஸ்ரீமஹாபெரியவர்கள் ஏற்படுத்திய வேத ரக்ஷண நிதி அறக்கட்டளையின் நிர்வாஹகரான ஸ்ரீ அண்ணாதுரை ஐயங்காருடன் சென்று அநேக பாடசாலைகளுக்கு வார்ஷிக பரீக்ஷை நடத்தியுள்ளார். பிற்காலத்தில் ஸ்ரீமடத்தின் வேத பாஷ்ய பரீக்ஷைகளிலும் பரீக்ஷாதிகாரியாக பணியாற்றியுள்ளார்.

முதலில் வீட்டில் நடந்து வந்த வேத ஸம்ரக்ஷணத்தை மேலும் வளர்க்க 1990களில் புதிய இடத்தில் வேதபவனம் என்ற பாடசாலை கட்டிடத்தை நிர்மாணித்தார். இதன்மூலம் நூற்றுக்கும் மேற்பட்ட மாணவர்கள் இருந்து படிக்கக்கூடிய வசதிகளை அமைத்தார். முன்பு தொடங்கப்பட்ட க்ருஷ்ண யஜுர்வேதத்துடன் இங்கே ருக்வேதமும், ஸாமவேதமும் கூட சேர்க்கப்பட்டன.

1998ல் ஸ்ரீ புதுப்பெரியவர்கள் கைலாஸ யாத்ரை செய்து அங்கு ஸ்ரீபகவத்பாதாள் விக்ரஹத்தை ப்ரதிஷ்டை செய்து வ்யாஸ பூர்ணிமையன்று வ்யாஸ பூஜையையும்

செய்து உடனே திரும்பி வந்து ஹைதராபாத்தில் உள்ள ஸ்கந்தகிரியில் நமது ஸ்ரீமடத்தில் சாதுர்மாஸ்ய ஸங்கல்பம் செய்தார்கள். அச்சமயம் ஸ்ரீ கனபாடிகள் ஸ்ரீ பெரியவர்களிடம் ஒரு குறிப்பிட்ட ப்ரார்த்தனையுடன் வந்தார்.

பாடசாலையை ஒட்டி உள்ள இடத்தை பாடசாலையை விரிவாக்கம் செய்வதற்காக வாங்க முயற்சிப்பதாகவும் அதற்கு சில இடையூறுகள் ஏற்பட்டு வருவதாகவும் அவை நீங்க பெரியவர்களின் அனுக்ரஹம் வேண்டும் என்றும் ப்ரார்த்தித்தார். ஸ்ரீ பெரியவர்கள் சிரித்துக்கொண்டே ''கவலைப்படாதே. அது வேதத்திற்கான இடம், கிடைத்துவிடும். அங்கே வந்து சந்த்ரமௌளீச்வர பூஜை செய்வேன்'' என்றார்கள்.

அதன்படியே விரைவிலேயே அந்த இடம் எளிதில் கிடைத்து அடுத்த ஓரிரு வருடங்களில் கட்டிட வேலையும் நடந்தேறி ஸ்ரீ பெரியவர்கள் அங்கு வந்து சந்த்ரமௌளீச்வர பூஜை செய்தார்கள். இவ்விடம் தற்சமயம் வைதிக நிகழ்ச்சிகள், பாராயணங்கள் மற்றும் ஸதஸ்ஸுகள் நடக்கும் ஸபா மண்டபமாக விளங்குகிறது.

இவ்வாறு பலவிதத்திலும் ஸ்ரீ காஞ்சீ காமகோடி பீடாதிபதிகளின் அனுக்ரஹத்திற்கு பாத்ரமான ஸ்ரீகனபாடிகள், ஆசார்ய ஸ்வாமிகளின் அபிப்ராயப்படி பலவிடங்களில் தார்மிக காரியங்களை, வேத பாராயணங்களை நடத்திக்கொடுத்திருக்கிறார்.

அஸ்ஸாம் மாநில குவஹாத்தியில் பூர்வ திருப்பதி பெருமாள் கோவிலின் கும்பாபிஷேகம் முதல் அதன் ஸம்வத்ஸராபிஷேகங்களுக்கும் ப்ரஹ்மோத்ஸவங்களுக்கும் பொறுப்பேற்று தாமே முன்னின்று நடத்தி கொடுத்து வந்தார். ஸிக்கிம் மாநில காந்தோக் நகரத்தில் பஞ்சாயதன கோவில் கும்பாபிஷேகத்தையும் நடத்தி கொடுத்தார். இன்னும் அண்மையில் 2019ல் பரளி வைத்யநாத க்ஷேத்ர அதிருத்ரம் உள்பட பலவிடங்களிலும் இவ்வாறு நடத்திக்கொடுத்தார்.

மேலும் ஸ்ரீ கனபாடிகள் வருடாவருடம் ஸ்ரீ மடத்திற்கு வந்து பிக்ஷாவந்தனம் செய்துவந்தார். பிறகு 2010 அளவில் தொடங்கப்பட்ட வைதிகாள் பிக்ஷாவந்தன ஸமிதியின் அத்யக்ஷராகவும் இருந்தார். இதன் மூலம் அமைக்கப்பட்ட நித்ய பிக்ஷாவந்தன கைங்கர்யத்திற்கு முதல் வருடம் முழுவதும் பொறுப்பு எடுத்து நடத்துவித்தார்.

தமது வேத பவனத்தில் வருடந்தோறும் ஸ்ரீ பகவத்பாதாள் ஜயந்திக்கு மஹாருத்ரம் மற்றும் சதசண்டி, ஸ்ரீ மஹாபெரியவாள் ஜயந்திக்கு சாஸ்த்ர ஸதஸ், ஸ்ரீ புதுப்பெரியவாள் ஜயந்தி மற்றும் ஸ்ரீ பெரியவாள் ஜயந்திக்கு ஆவஹந்தீ முதலிய ஹோமங்கள் ஆகிய

நிகழ்ச்சிகளையும் ஸ்ரீ மஹாபெரியவாள் மற்றும் ஸ்ரீபுதுப்பெரியவாள் ஆராதனை நிகழ்ச்சிகளையும் விடாமல் நடத்தி வந்தார்.

ஸ்ரீ கனபாடிகள் தமது குமாரர்களான ஸ்ரீராமன், கண்ணன் ஆகியோர் இருவரையும் தமது பாதையிலேயே செலுத்தி ஸலக்ஷண கனபாடிகளாக ஆக்கினார். மேலும் தற்சமயம் அவர்களும் தந்தையைப் போல் வேத ஸம்ரக்ஷண கைங்கர்யத்தில் ஈடுபட்டு வருகின்றனர். ஸ்ரீராம கனபாடிகளின் இரு குமாரர்கள் மற்றும் கண்ணன் கனபாடிகளின் குமாரன் ஆகிய மூன்று குழந்தைகளும் தமது பிதாமஹர் ஸ்தாபித்த வேத பவனத்திலேயே வேத அத்யயனம் செய்து வருகிறார்கள்.

2010ல் அகில இந்திய அளவில் கட்டாயக் கல்விச் சட்டம் என்பது வந்து அனைத்து சிறார்களுக்கும் லௌகிக கல்வியானது நிர்பந்தப்படுத்தப்பட்டதால் பாரம்பரிய வேத கல்விக்கு இடையூறு வரக்கூடிய தருணம் ஏற்பட்டது. அச்சமயம் ஸ்ரீ பெரியவர்கள் ஸ்ரீ கனபாடிகளின் தலைமையில் பாரதத்தின் பலவேறு ஸநாதன தர்ம ஸ்தாபனங்களின் ப்ரதிநிதிகளுடன் ஒரு குழுவை ஏற்படுத்தினார்கள். அரசாங்கத்தை முறைப்படி அணுகும்படி அனுக்ரஹித்தார்கள். அதன்படி இளம் சிறார்களுக்கு வேதக்கல்வி பெற இடையூறு ஏற்படாத வண்ணம் ஸ்ரீ கனபாடிகள் மூலம் ஆவன செய்தார்கள்.


2014ல் ஸ்ரீ கனபாடிகள் தமது வித்யாகுருவான ப்ரஹ்மஸ்ரீ ராமஸ்வாமி சர்மா அவர்களது நூற்றாண்டின்போது காஞ்சீபுரத்தில் ஸ்ரீ மஹாபெரியவர்களின் அதிஷ்டான வளாகத்தில் ஸ்ரீ புதுப்பெரியவர்களின் ஸ்ரீ பெரியவர்களின் முன்னிலையில் தலைமையேற்று அதற்கான முதல் வேத பாராயண நிகழ்ச்சியைத் துவங்கி வைத்தார். பிறகு மாதாமாதம் அன்னாரது நக்ஷத்ரத்தன்று வெவ்வேறு இடங்களில் ஸ்ரீ கனபாடிகள் தமது சிஷ்யர்கள் மூலம் பாராயணங்கள் நடத்துவித்தார். இதன் பூர்த்தி வேத பவனத்தில் நடந்தேறியது.

வேத அத்யயன பரம்பரையைக் காப்பாற்றுவதுடன் ஸம்ப்ரதாய தொடர்பான அநேக ஸத்-க்ரந்தங்களை தமது அறக்கட்டளையின் மூலம் வெளியிட்டுள்ளார். மேலும் தனிப்பட்ட முறையிலும் வேத தர்ம காரியங்களில் ஈடுபடுவோருக்கு பலவிதத்திலும் உதவியுள்ளார். தேசிய சுதந்திர தினம் போன்ற நிகழ்ச்சிகளை பாடசாலைகளில் நடத்தி மாணவர்களுக்கு தேசிய ப்ரஜ்ஞையை வளர்க்கும் அவசியத்தையும் காட்டினார்.

அண்மையில் மக்களது ஆரோக்ய விஷயத்தில் நிலவிவரும் இக்கட்டான தேச நிலையை போக்கவும் கடந்த மாதம் சீன தேசத்துடன் ஏற்பட்ட எல்லை ப்ரச்சனையில் நமது தேசத்திற்கு வெற்றி கிட்டவும் 1962 சீன யுத்தத்தின் போது ஸ்ரீ மஹாபெரியவாள் செய்த ஆதேசங்களை ஞாபகம் வைத்துக்கொண்டு அதே வைதிக ஆசரணைகளை மறுபடியும் நடத்தினார்.

நமது இன்றைய ஸ்ரீ பெரியவர்களும் கடந்த மாதம் ஸ்ரீ கனபாடிகளது ஆரோக்யத்தை குறித்து விசாரித்தும், தற்சமயம் தேச சூழ்நிலை காரணமாக பாடசாலை மாணவர்கள் வீட்டிற்கு அனுப்பப்பட்டிருக்கையில் அவர்களது வித்யாப்யாஸத்தை பரிபாலிக்கும் முறை குறித்து வழிகாட்டுதல் தெரிவித்தும் தகவல் அனுப்பியிருந்தார்கள். இவ்வாறு ஸ்ரீ கனபாடிகள் இன்றைய ஸ்ரீ பெரியவாளின் அனுக்ரஹ சிந்தனைக்கும் பாத்ரமாகியிருந்தார்.

வேதமானது அதன் மூல பாரம்பரிய வடிவத்திலேயே என்றென்றும் பிரகாசித்துக் கொண்டிருக்க வேண்டும் என்று ஸங்கல்பித்து அதற்காக காலம் காலமாக உழைத்து வருகிறார்கள் நம் ஸ்ரீகாமகோடி ஆசார்யர்கள். அத்தகைய அவர்களது கரங்களால் பலவேறு இடங்களிலும் தருணங்களிலும் பலவாறு கௌரவிக்கப்பட்டுள்ளார் ஸ்ரீகனபாடிகள். அவர்களது அனுக்ரஹ சிந்தனைக்குப் பாத்திரமாகி அவர்களது வழிகாட்டுதலின்படி வேத ரக்ஷணம் செய்த ஒரு பெரும் ஸாதகராக வாழ்ந்தார். அவரது சரித்திரம் குரு பக்திக்கும் வேத மாதா கைங்கர்யத்திற்கும் தார்மிக சிந்தனைக்கும் எடுத்துக்காட்டாக அனைத்து வேத அத்யாபகர்கள் மற்றும் வித்யார்த்திகளுக்கும் முன்னுதாரணமாக விளங்குகிறது.




**இந்திய வாழ்க்கைமுறை இயற்கையான உண்மையான வாழ்க்கை முறை பற்றி பார்வையை கொடுக்கிறது. இயற்கைக்கு மாறான முக மூடிகளை அணிந்திருக்கிறோம். இந்தியாவின் முகத்தில் இறைவனின் கருணை ரேகைகள் மிளிர்கின்றன.**

**(ஜார்ஜ் பெர்னாட் ஷா)**

**இந்தியாவின் ஆழ்ந்த சிந்தனைகள் எப்படி க்ரேக்க நாட்டுக்கள் நுழைந்தன என்பதையும், அங்கிருந்து நம் காலத்திய தத்துவ கோட்பாடுகள் வரை அவை எப்படி நீண்டன என்பதை கண்டறிய வேண்டும் என்று நான் விரும்புகிறேன்.**

**(ஜான் ஆர்சிபால்ட் வீலர் அமெரிக்க இயற்பியலாளர்.)**

# மகா பெரியவாளின் நினைவு மஞ்சரி 27



மகாபெரியவாளைத் தேடித்தான் பாமரன் முதல் பண்டிதர்கள் வரையில் செல்வது வழக்கம். இதற்கு மாறாக பெரியவாளே சிலரைத் தேடி தர்சனம் கொடுத்தது உண்டு. இதுவும் அவரே சொன்னது. காசியில் ஆலமரத்து ஆண்டியைப் பார்க்க அவர் சென்றது பற்றி கடந்த இதழில் கண்டோம்.

இன்னொரு நிகழ்ச்சியை இப்போது பார்ப்போம்.

பெரியவா 1930 இல் ஸ்ரீ வைகுண்டம் பகுதியில் யாத்திரை நடத்தி வந்தார். வழக்கம் போல் சுற்றி இருக்கும் பகுதிகளிலிருந்தும் மக்கள் தர்சனத்துக்கு வந்தனர். ஸ்ரீ வைகுண்டம் பகுதியின் ஓரிடத்தில் ஒரு விசித்ரமான பழக்கம் வழங்கி வந்தது. இவ்விடத்தில் இருக்கும் பெண்கள் அவ்விடத்தின் எல்லையைத் தாண்டினால் அவர்களது கழுத்து உடம்பில் தங்காது. இவ்வளவு கொடூரமான தண்டனை , வழக்கம். ஸ்ரீ வைகுண்டத்தின் மக்கள் பெரியவாளை தர்சிக்க வந்த போது இதைப்பற்றிச் சொல்லி அங்கு இருக்கும் பெண்கள் பெரிவாளைத் தர்சிக்க ஆவலாயிருப்பதாகக் கூறினார்கள்.

அவரும் எந்த ஸம்ப்ரதாயத்தையும் மாற்ற விரும்பாதவர். அவரே அவ்விடத்துக்கு கிளம்பினார். யாத்திரை ஸ்ரீவைகுண்டம் நோக்கி போய்க் கொண்டிருந்தது. வழியில் ஒரு கிழவி பெரியவா போவதைப் பார்த்து ஐயா கொஞ்சம் நில்லுங்கள் நான் பெரியவங்களை பார்க்கணும் என்று வழி மறித்தாள். ஸ்ரீ வைகுண்டம்தான் போறோம் அங்கேயே வந்து தர்சனம் செய்து கொள்ளச் சொல் என்று பெரியவா கூற அவள் ''இல்லீங்க நான் அங்க வந்தா என் தலை இருக்காது. அதுக்காகத்தான் நிக்கச் சொல்றேங்க. 300 வருஷங்களுக்கு முன்னால எங்க பரம்பரையைச் சேர்ந்தவங்க

*எல்லையைத் தாண்டி வந்துட்டாங்க. நான் அவன்களோட வழியில் வந்தவ. அங்க வந்தா என் தலை இருக்காதுங்க. அதனாலதான் பல்லக்க நிறுத்தச் சொன்னங்க. தப்புத்தான் மன்சிக்கிங்க '' என்றாள்.*

*பெரியவா உடனே பல்லக்கை நிறுத்தி அக்கிழவியிடம் சென்று ''உன் மேல தப்பில்லம்மா. நன்னா என்னை தர்சனம் பண்ணிக்கோ என்று கூறி அவளுக்கு அனுக்ரஹம் செய்தார். பின்பு ஸ்ரீ வைகுண்டம் சென்று பாதிக்கப்பட்ட ஸ்த்ரீகளுக்கும் அனுக்ரஹம் செய்தார். தேடி வந்த திருவருள் என்றால் பெரியவாதான். படித்தவன் பாமரன் எனும் பாகுபாடு எதுவுமில்லாமல் மாபெரும் மழை போல் பெரியவாளின் அருள் மழை பொழிந்தது பாரெங்கும்.*

*(தொடரும்)*

*வேதங்களைப் பற்றிய சிந்தனை என் மனதில் அடிக்கடி தோன்றுகிறது. நிரந்தர ஊதியத்தையும் விளக்க இயலாத ஆற்றலையும் நிரந்தர நிம்மதியையும் அவற்றிடம் நான் கண்டறிகிறேன்.*

***(ரால்ஃப் வால்டோ எமெர்சன்)***

*உலகம் முழுவதும் பார்த்தாலும் உபனிஷத்துகளைக் கற்பது போன்று ஒரு கல்வி கிடையாது. ஏனெனில் அவை நமக்கு மிகுந்த நன்மையைத் தருகின்றன. நம்மை உயர வைக்கின்றன. அவைதான் என் வாழ்வின் நிம்மதி. அவையே என் மரணத்திலும் அமைதி தருவன. அவை உயர்ந்த ஞ்யானத்தின் வெளிப்பாடுகள்.*

***(ஆர்தர் ஷோபனேர் ஜெர்மானிய தத்வ இயலார்.)***

*இந்துக்கள் 4500 ஆண்டுகளுக்கு முன் கணித்த நக்ஷத்ரங்கள் பற்றிய கணிப்பு இன்றைய கேஸின் மற்றும் மேயெர் உருவாக்கிய நவீன வானியல் அட்டவணையோடு ஒரு நிமிடம் கூட முன்னோ பின்னோ இல்லாமல் மிகச்சரியாக உள்ளது.*

***(சில்வெய்ன் பெய்லி ப்ரான்சின் வானவியல் அறிவாளர்)***

# புராணக் கதை

காஞ்சி வாதூலன்



'ஸம்ஞ்யா சாயா தேவி ஸமேத' என்று கூறுகிறோமே – சாயா யார்? பௌராணிகர் கூறலானார். விஸ்வகர்மாவிற்கு ஸம்ஞ்யா என்று பெண் இருந்தாள். அவளை அவர் ஸூர்ய தேவருக்கு மணம் முடித்தார். அவர்களுக்கு விவஸ்வதன் என்னும் மகன் பிறந்தான். அவனே ஏழாவது மன்வனத்ரத்தின் அதிபன். அவன் பிறப்பிற்குப் பிறகு அவருடைய ஒளி மிகவும் அதிகமாகப் ப்ரகாசித்தது. கண் கூசும் அளவுக்கு இருந்ததால் ஸ்ம்ஞ்யா அவரிடம் கிட்ட நெருங்கவே அஞ்சினாள். ஸூர்யதேவர் அருகில் வரும் போதெல்லாம் தன் கண்களை மூடிக் கொள்வாள். இது அவருக்கு மிகவும் கோபத்தை உண்டாக்கியது. ''எப்போது நீ கண்களை மூடிக்கொண்டு நியமத்தைக் கடைபிடித்தாயோ உனக்குப் பிறக்கும் மகன் ப்ரபஞ்சத்தையே தன் நியமத்திற்கு கொண்டு வருவான் ''என்றார்.

நாளடைவில் அவர்களுக்கு ஒரு ஆண், ஒரு பெண் குழந்தைகள் பிறந்தன. ஆண் பிள்ளை தான் யமன், பெண் பிள்ளை தான் யமுனை. இதனிடையில் ஸம்ஞ்யா ஸூர்ய தேவனுடைய ப்ரகாசத்தைப் பொறுத்துக் கொண்டாலும் மிகுந்த பாதிப்புக்கு ஆளானாள். எனவே அவ்விடம் நீங்கி தன் பிறந்தகம் செல்ல முடிவெடுத்தாள். அதற்கு ஒரு தந்த்ரம் செய்தாள். தன் நிழல் ''சாயா''வை அங்கு விட்டு விட்டு தன் குழந்தைகளைப் பார்த்துக் கொள்ள பணித்தாள். இந்த ஏற்பாடு ஸூர்ய தேவனுக்குத் தெரியக் கூடாது என்றும் அவளிடம் கூறி விஸ்வகர்மாவான தன் தந்தையிடம் சென்றாள்.

அவள் அங்கு வந்தது கண்டு அவர் மகிழ்ந்தார். பல நாள் அவள் அங்கேயே இருப்பது கண்டும் ஸூர்யதேவனிடம் போக விருப்பமில்லை என்பதை அறிந்த அவர் இது தர்மமில்லை என்றும், கணவன் இருக்குமிடம் தான் மனைவியின் இடம் என்றும் கூறி அவளை கணவன் இருக்குமிடம் செல்ல பணித்தார்.

அவளுக்கு இதில் இஷ்டமில்லை. மேலும் கணவனின் ப்ரகாசத்தைத் தாங்கிக்கொள்ள தன்னைத் தயார் செய்து கொள்ள தவம் செய்ய கானகம் சென்றாள். அங்கு தன்னை குதிரை வடிவில் மாற்றிக் கொண்டு தவம் செய்தாள். இங்கு ஸூர்யதேவனின் இருப்பிடத்தில் சாயா சரியான முறையில் பிள்ளைகளை நன்றாக நடத்தி வந்தாள். அவளுக்குப் பிறந்த பிள்ளைகளால் வந்தது பிரச்சனை. தன் பிள்ளைகளிடம் பரிவு அதிகமாகக் காட்டி தான் மாற்றந்தாய் என்பதை நிரூபித்தாள்.

மனுவிற்கு இது தெரிந்தும் பேசாமலிருக்க யமன் கொதித்தான் . ஒரு நாள் கோபத்தில் அவளை உதைக்க காலை உயர்த்தினான். கால் துண்டமாகப் போக அவள் சபித்தாள். பயந்துபோன அவன் ஸூர்ய தேவனிடம் சென்று உண்மையான அம்மா இப்படிச் சபிப்பாளா என்று கேட்க திகைத்துப் போய் அவர் சாயாவை மிரட்ட அவளும் உண்மையைச் சொன்னாள். உடனே அவர் விஸ்வகர்மாவிடம் சென்று ஸ்ம்ஞ்யாவை தருமாறு கேட்க அவரும் நடந்ததையெல்லாம் கூறி அவள் குதிரை உருவில் தவம் இயற்றுகிறாள் என்றார். ஸூர்ய தேவனும் அவரிடம் தன் ப்ரகாசத்தைக் குறைக்க வேண்ட எல்லாரும் பார்க்குமளவிற்கு அவர் அதைக் குரைத்தார். ஸூர்யதேவனும் கானகம் சென்று குதிரை உருவில் இருக்கும் தன் மனைவியைக் கண்டு மகிழ்ச்சி கொண்டார்.

அவளும் குதிரை உருவில் இருக்கும் தன் கணவனை மோப்ப சக்தியால் கண்டு கொள்ள இருவரும் தங்கள் சுய உருவை அடைந்தனர். அவர்களுக்குப் பிறந்தது தான் 'நாசத்யா தாசத்ரா'' என்னும் இரு அஸ்வினீ குமாரர்கள் என்று கூறி முடித்தார்.

(மார்கண்டேய புராணம்)

# மஹிஷாஸுரமர்தினி ஸ்தோத்ரம்

कटितटपीत दुकूलविचित्र मयुख्तिरस्क्रुत चन्द्ररुचे
प्रनतसुरासुर मौलिमणिस्पुरदम्सलसन्नख चन्द्ररुचे ।
जितकनकाचल मौलिमदोर्जित निर्भरकुन्झर कुंभकुचे
जय जय हे महिषाशुरमर्दिनि रम्यकपर्दिनि शैलसुते ।। १५ ।।

**கடிதடபீத டுகூலவிசித்ர மயூகஸ்திரஸ்க்ருத சந்த்ரருசே**
**ப்ரணதஸுராஸுர மௌலிமணி டம்சலஸன்னக சந்த்ரருசே ।**
**ஜிதகனகாசல மௌலிமதொர்ஜித நிர்பரகுஞ்சர குன்பக்ருதே**
**ஜய ஜய ஹே மஹிஷாஸுர மர்தினி ரம்யகபர்தினி சைலஸுதே ॥ 15 ॥**

*நிலவின் தன்னொளியைக் கூட தோற்கச் செய்யும் அழகிய கிரணங்களால் ப்ரகாசிக்கும் பட்டாடையை இடுப்பில் அணிந்திருப்பவளே உன் திருவடிகளை பணிகின்ற தேவர் மற்றும் அஸுரர்களின் கிரீடங்கள் பதிக்கப்பட்ட மாணிக்கக்கற்களைப் ப்ரதியப்லிக்கச்செய்யும் நிலவொளி போன்று ஒளியை வீசும் நகங்களை உடையவளே யானையின் மத்தகத்தைப் போன்றும் அழகில் பொன்மயமான மேருவை நிகர்த்தும் மார்பகங்களை உடையவளே மகிஷாஸுரனை அழித்தவளே அழகிய பின்னிய கூந்தலை உடையவளே மலை மகளே ஜய ஜய என்று உன்னைப் போற்றுகிறேன்.*

विजितसहस्रकरैक सहस्रकरैक सहसकरैकनुते
कुतसुरतारक सन्गरतारक सूनुसुते ।
सुरथसमाधि समानसमाधि समानसमाधि सुजातरते
जय जय हे महिषासुरमर्दिनि रम्यकपर्दिनि शैलसुते ।। १६ ।।

**விஜித ஸஹஸ்ரகரைக ஸஹஸ்ரகரைக ஸஹஸ்ரகரைகனுதே**
**க்ருதஸுரதாரக சங்கரதாரக சங்கரதாரக ஸூனுஸுதே ।**
**ஸுரதஸமாதி ஸமானஸமாதி ஸமானஸமாதி ஸுஜாதரதே**
**ஜய ஜய ஹே மஹிஷாஸுர மர்தினி ரம்யகபர்தினி சைலஸுதே ॥ 16 ॥**

*உன்னால் வெல்லப்பட்ட கோடிஸூர்யர்களால் துதிக்கப்பட்டவளே தேவர்களை காக்கவும் தேவாஸுர போரை முடிவுக்கு கொண்டுவர முருகப்பெருமானை மகனாகப்பெற்றவளே ஸுரதன் ஸமாதி ஆகிய உயர்ந்த நிலைகளைப்போல் உயர் நிலைகளை நாடுபவர்களிடம் ஆர்வமும் அக்கறையும் கொண்டவளே மஹிஷாஸுரனை அழித்தவளே அழகிய பின்னைய கூந்தலை உடையவளே மலைமகளே ஜய ஜய என்று உன்னைப் போற்றுகிறேன்.*

# ஸ்ரீ சாங்கர போத ரத்னாவளி

*108 அத்வைத வாசகங்கள்*

*பி. ஆர் கண்ணன், மும்பை*

प्रकुतम् परमत्मस्वरूपम् अद्वैतम् (स्वात्मनिरूपणाम्) । 79

**ப்ரக்ருதம் பரமாத்மரூபம் அத்வைதம்**

*அத்வைதமே இயற்கையான பரமாத்மரூபம்.*

किम् पारमर्थिकम् स्यात् अद्वैतम् (प्रनोतर रत्नमालिका) । 80

**கிம் பரமார்திகம் ஸ்யாத் அத்வைதம்**

*எது பரமார்திகம்? அத்வைதம்.*

अवस्तात्रय अतीतम् अद्वैतमेकम् सरुपसन्धानम् । 81

*நனவு, கனவு, சுழுமனை இம்மூன்று நிலைகளைத் தாண்டி இருப்பது அத்வதமே.*

अद्वैते ब्रह्मणि स्थेयम् प्रत्यग्बह्मात्मना सदा । 82

*ஆத்மனாயிருக்கும் அத்வைதப்ரம்மத்தில் ஒருவன் இருக்கவேண்டும்.*

कदा अद्वैतम् पश्यनिखिलमपि सत्यम् शिवमयम् । 83

**கதா அத்வைதம்பஸ்யன் நிகிலமபி ஸத்யம் ஸிவமயம்**

*எல்லாம் ப்ரம்மமயம் மங்களமயம் என்பதை எப்போது பார்ப்பது,*

सत्यम् ब्रह्माद्वितीयमेवाह्म् । 84 (विवेक चूडामणि:)

**ஸத்யம் ப்ரம்ம அத்விதீயமேவாஹம்**

*இரண்டற்ற அத்விதீயமான ஸத்யமே நான்.*

कुकचिदखण्ड विबोधम् अद्वतीयम् । 85 मायापन्चकम्

*அத்வைதம் அகண்டம் ப்ரபோதம்.*

अद्वैतम् परमानन्दम् ब्रह्मैवास्मीति भावयेत् । 86

**அத்வைதம் பரமானந்தம் ப்ரம்மைவாஸ்மீதி பாவயேத்.**

*பரமானந்தமான அத்வைதமாகவே நானிருக்கிறேன்.*

स एव भुन्क्ते अद्वयमानन्दम् । 87 प्रबोधसुधाकर:

**ஸ ஏவ புங்க்தே அத்வய ஆனந்தம்**

*அத்வைத ஆனந்தத்தை அவன் அனுபவிக்கிறான்.*

तदत्वैतम् रूपम् निजपरविहीनम् । 88

**தத் அத்வைதம் ரூபம் நிஜரூபவிஹீனம்**

*தன் ரூபமில்லாதது அத்வைத ரூபம்.*

समाश्लिष्टकाय त्रयिपि अद्वितीय शिवोहम् । 89 (निर्वाणमन्जरी)

**ஸமாஸ்லிஷ்டகாய த்ரயோபி அத்விதீய சிவோஹம்.**

*மூன்று உடல்களில் நான் இருந்தாலும் உண்மையில் நான் சிவனே.*

न शून्यम् न चाशून्यम् अद्वैतकत्वात् । 90 (दशश्लोकी)

**ந சூன்யம் ந சாசூன்யம் அத்வைதகத்வாத்.**

*அது அத்வைதமானதால் சூன்யமுமில்லை அசூன்யமுமில்லை.*

*(தொடரும்)*

*தான் சொல்வதே சரி என வாதாடுபவர்கள்*
*உறவுகளை இழக்க நினைப்பவர்கள்*

**மௌனமே சிறந்த பதில்.**

*பேசாது கேட்டுக் கொண்டு இருப்பவர்கள்*
*உறவுகளை வெல்ல நினைப்பவர்கள்*

**பகவான் கிருஷ்ணர்**



# வேதாந்த ஸாரம்

## ஸதானந்த யோகிந்த்ரர்

வேங்கடகணபதி சர்மா

## அத்யாஸ அபவாதம் 4

**அபவாதோ நாம ரஜ்ஜுவிவர்தஸ்ய சர்பஸ்ய ரஜ்ஜு மாத்ரத்வவத் வஸ்துவிவர்தஸ்ய அவஸ்துனோ அஞ்யானாதே:ப்ரபன்சஸ்ய வஸ்து மாத்ரத்வம் 137**

*பார்க்கப்படும் ரஜ்ஜு ஸர்ப்பத்தில் ரஜ்ஜுவைத் தவிர உண்மை எதுவும் இல்லை. அதுபோல பார்க்கப்படும் ப்ரபன்சம் அறியாமையால் பரம் பொருளின் மீது ஏற்றி வைக்கப்பட்டுள்ளது. உண்மையில் பரம்பொருளைத் தவிர எதுவுமில்லை. இதுவே அத்யாஸ அபவாதமெனப்படும்.*

**ததுக்தம்**

**''ஸதத்வதோஅன்யதா ப்ரதா விகார இத்யுதீரித:**
**அதத்வதோ அன்யதாப்ரதா விவர்த இத்யுதீரித:''138**

*ஒருபொருள் வேறு பொருளாவது விகாரமெனப்படும். வேறு பொருளாக மாறினது போல் தோன்றுவது விவர்தம் எனப்படும்.*

**ததாஹி ஏதத்போகாயதனம் சதுர்விதஸகல ஸ்தூல சரீர ஜாதம் போக்ய ரூப அன்னபானாதிகம் ஏததாயதன பூத பூராதி சதுர்தச புவனன்யேததா யதனபூதம் ப்ரம்மாண்டம் ச ஏதத் ஸர்வமேதேஷாம் காரணரூபம் பஞ்சீக்ருதபூதமாத்ரம் பவதி। 139**

*நான்கு விதமான ஸ்தூல சரீரங்கள், அவைகளுக்குரிய அன்னபானங்கள் என்னும் போக்ய வஸ்துக்கள் ஈரேழு 14 லோகங்கள் இஅவி எல்லாம் இவைகளின் பரு பூதனக்ளில் ஒடங்கும்.*

**ஏதானி சப்தாதி விஷய ஸஹிதானி பஞ்சீக்ருதானி பூதானி ஸூக்ஷ்மசரீர ஜாதம் ச ஏதத் ஸர்வம் ஏதேஷாம் காரணரூப பஞ்சீக்ருதபூதமாத்ரம் பவதி 140**

*இந்த ஐந்து பருப் பூதங்களும் சப்தம் முதலிய விஷயங்களும், ஸூக்ஷ்ம சரீரங்களும் இவை எல்லாம் அபஞ்சீகரணம் செய்யப்படாமல் உள்ள காரணத்தில் ஒடுங்கும்.*

**ஏதானி ஸத்வாதி குணஸஹிதானி அபஞ்சீக்ருதானி உத்பத்தி வ்யுத்க்ரமேண ஏதத் காரணபூத அஞ்யான உபஹித சைதன்யமாத்ரம் பவதி ॥ 141**

*இந்த அபஞ்சீகரணம் ஆகாமல் இருக்கும் பூதங்கள் சத்வ ரஜச் தமஸ் குணங்களுடன் கீழிருந்து மேலாக தங்களின் மாயையுடன் கூடிய சைதன்யத்தில் ஒடுங்கும்.*

**ஏதத் அஞ்யானம் அஞ்யான உபஹிதம் சைதன்யம் சேஸ்வராதிகம் ஏதத் ஆதாரபூதானி உபஹித சைதன்யரூபம் துரீயம் ப்ரஹ்மமாத்ரம் பவதி ॥ 142**

*இந்த அஞ்யானம் இதோடு சேர்ந்திருக்கும் சைதன்யம் அதாவத் ஈஸ்வரன் இவை துரீயமான எல்லாவற்றிற்கும் ஆதாரபூதமான ப்ரம்மத்தில் ஒடுங்கும்.*

**ஆப்யாம் அத்யாரோப அபவாதாப்யாம் தத்வம்பதார்த சோதனமபி ஸித்தம் பவதி ॥ 143**

*இதன் வழியாக அத்யாஸமும் அத்யாரோபமும் ''தத்'பதமும் ''த்வம்'' பதமும் விளக்கம் பெறும்.*

*(தொடரும்)*



*தமிழ் நாட்டின் தனிப்பட்ட சிறப்பு எங்கு பார்த்தாலும் பிள்ளையார் கோயில்கள் இருப்பதேயாகும். ''கோயில்'' என்று பெயர் வைத்து விமானமும் கூரையும் போட்டுக் கட்டிடம் எழுப்ப வேண்டும் என்பதுகூட இல்லாமல், அரச மரத்தடிகளிலேகூட வானம் பார்க்க அமர்ந்திருக்கும் ஸ்வாமி நமது பிள்ளையார். தெருவுக்குத் தெரு ஒரு பிள்ளையார் கோயில், நதிக் கரைகளிலெல்லாம் பிள்ளையார், மரத்தடிகளில் பிள்ளையார் என்றிப்படி இந்தத் தமிழ் தேசம் முழுவதும் அவர் வேறெந்த ஸ்வாமிக்கும் இல்லாத அளவுக்கு இடம் கொண்டு அருள் பாலித்து வருகிறார். அவரைப் ''பிள்ளையார்'' என்றே அன்போடு கூறுவது நம் தமிழ்நாட்டுக்கே உரிய வழக்கம். சர்வலோக மாதா பிதாக்களாகிய பார்வதி பரமேசுவரர்களின் ஜேஷ்ட புத்திரர் அவர். ''பிள்ளை'' என்றால் அவரைத்தான் முதலில் சொல்ல வேண்டும். வெறுமே ''பிள்ளை'' என்று சொல்லக்கூடாது என்பதால் மரியாதையாகப் ''பிள்ளையார்'' என்று சொல்வது தமிழ்நாட்டுச் சிறப்பு.*

# மகாபாரத சுருக்கம்

பாரதக் கதையை மூலமட்டும் சுருக்கமாக இங்கே தருகிறோம். டாக்டர் வே. ராகவன் தொகுத்துத் தந்ததை தமிழில் மொழி பெயர்த்து அளிக்கிறோம். மொழி பெயர்ப்பாளர் ஜயவிஜயா



த்ரௌபதியின் மைக்குழல் பற்றி துச்சாதனன் இழுத்துவர அவள் க்ருஷ்ணா, அர்ஜுனா, நாராயணா என்று கூவி அழைத்தாள்.

துச்சாதனன் பெண்ணே நீ ரஜஸ்வலையாக இரு ஒற்றை வஸ்த்ரத்துடனாவது இரு. எங்களால் ஜயிக்கப்பட்ட நீ எங்களுக்கு அடிமை.

அடிமைப்பெண்களுடன் இரு. கலைந்த கூந்தலும் கண்ணீரும் கம்பலையுமாய் இருந்த பாஞ்ஜாலி மிகுந்த கோபத்துடன் கூறலானாள்.

த்ரௌபதி மூடனே ஒரு சபையில் ஒரு பெண்ணை நீ இழுத்து வந்தது சரியா? சபையோர்க்கும் இது தகுமா? உன்னை யாரும் பழிக்கவுமில்லை. உன் செயலைப் பாராட்டுகிறர்கள் போலும்.

த்ரோணாசார்யரே, பீஷ்மப் பிதாமஹரே, விதுரரே, சபையோர்களே அரசே இந்த அதர்மத்தைப் பார்க்கவில்லையா ?

இவள் கூறுவதைக் கேட்ட துச்சாதனன் அடி தாஸி என்று கூறி சிரித்தான். கர்ணனும், சகுனியும் அவன் சொன்னதை ஆமோதித்து சிரித்தார்கள்.

**பீஷ்மர் :** இன்னொருத்தருடைய பொருளை பணயம் வைப்பதற்கு யாராலும் முடியாது. மனைவி கணவனைச் சார்ந்தவள். தர்மம் ஸூக்ஷ்மம்மானது. என்னால் எதுவும் சொல்வதற்கில்லை. மேலும் தர்மன் ராஜ்யத்தை விடுவானெயன்றி தர்மத்தை விட மாட்டான். நான் ஜயிக்கப்பட்டு விட்டேன் என்று அவன் கூறினான். அதனால் என்னால் இதை நிர்ணயம் செய்யமுடியவில்லை.

விகர்ணன் : என்னுடைய வாதத்தைக் கேளுங்கள். பாண்டவர்கள் எல்லாருக்கும் சொந்தமான இவளை தன்னை ஆட்டத்தில் இழந்த பின் தர்மர் பணயம் வைத்தார். இழந்தார். அதுவும் சகுனி சொல்ல அதை செய்தார். எல்லவற்றையும் பார்க்கும் போது அவள் ஜயிக்கப்படவில்லை. இதைக் கேட்டவுடன் சகுனியை இகழ்ந்தும், விகர்ணனைப் பாராட்டியும், பெரும் கோஷம் எழுந்தது. கோஷம் அடங்கியவுடன் கர்ணன் கூறுவான். த்ரௌபதியை பணயம் வைத்தபோது பாண்டவர்கள் எதிர்க்க வில்லை. அப்படியிருக்கும் போது அவள் ஜயிக்கப்படவில்லை என்று எப்படி கூறலாம் ?

ஒரு வஸ்த்ரத்துடன் இழுத்து வந்தது தவறு என்று கூறுவாயானால் நான் சொல்வதைக் கேள். ஒருவனுக்கு ஒருத்தி என்பது உலக நியதி.இவள் ஐந்து பேருக்கு மனைவி. அதனால் தாஸி. அப்படிப்பட்டவளை சபைக்கு இழுத்து வருவது தவறில்லை. துச்சாதனனே விகர்ணன் ஒரு பேதை, பாகன், பண்டிதன் போல் பேசுகிறான். நீ பாண்டவர்களின் ஆடைகளைக் களை.

அதைக் கேட்ட பாண்டவர்கள் அனைவரும் தங்கள் உத்தரீயங்களை வீசிவிட்டு அவையில் அமர்ந்தனர். பின்பு துச்சாதனன் சபையின் மத்தியில் பாஞ்ஜாலியின் ஆடையைக் களைய முறபட்டான்.

(தொடரும்)

# அத்வைத ஸித்தாந்த வினா விடை

**வினா : - தமிழ்ப் பண்டைய நூல்களில் இக்கருத்து இடம் பெற்றுள்ளதா?**

**விடை :** - திருநாவுக்கரசு சுவாமிகள், 'துறந்தானை' எனத் தொடங்கும் திருநாகேச்சுரத் திருத்தாண்டகத்தில்

நீர் நிலந்தீ வெளி காற்றாகி நிற்பனவு
நடப்பனவு மாயினானே

(6 திருமுறை திருநாகே திருத்தாண்ட 6)

என்று கூறி உண்மையை விளக்கியிருக்கிறார்.

**2. உலகத் தோற்றம் உண்மை யன்று**

**வினா : - உலகம் பரம்பொருள் தானே?**

**விடை : -** ஆம்.

**வினா : - ஆனால் உலகம் கடவுளைக் காட்டிலும் வேறுபட்ட தாய், அறிவற்ற தாய், தனிப்பட்டதாய்த் தோன்றுகிறதே ! இதுவும் உண்மை தானே?**

**விடை :** - இல்லை. இத்தோற்றம் உண்மையன்று. பொய் முன்னது உண்மையானால், பின்னது பொய்யாகவே வேண்டும்.

**வினா : - எப்படிப் பொய்?**

**விடை : -** ஒருவன் இருளில் ஓரிடத்திற்குள் செல்கிறான். வழியில், ஒரு பழுதை கிடக்கிறது. அதைப் பாம்பு என்று எண்ணி விடுகிறான் பயப்படுகிறான்?
இங்கு உண்மையான பழுதையில், பாம்பென்ற தோற்றம் உண்டானது பொய்தானே?
இது போலதான் உண்மையான பரம்பொருளில் உலகத்தோற்றம் உண்டானது பொய்.

**வினா :** - ஒருவனுக்கு உலகம் பரம்பொருளினும் வேறுபட்டதென்ற எண்ணம் எதை அடிப்படையாகக் கொண்டு ஏற்பட்டது?

**விடை : -** அறியாமையை அடிப்படையாகக் கொண்டு ஏற்பட்டது. இவ்வாறு அறியாமையை அடிப்படையாகக் கொண்டு தோன்றுவது உண்மைக்கு மாறான அஞ்ஞானத்தால் ஏற்பட்ட உலகத் தோற்றம் பொய்யே என்னும் கொள்கை இரண்டற்ற அத்வைதத்திலே தனிச்சிறப்பமைந்ததொரு முடிவாகும்?

**வினா : - தமிழ்நூல்களில் இதற்குச் சான்றுள்ளதா?**

**விடை : -** *தமிழ்ப் பெரியோர்ரெல்லோரும் உலகம் பொய்யென்று கதறியிருக்கிறார்கள் - திருநாவுக்கரசு.*

*பொய்ம்மாயப் பெருங்கடலில் புலம்பாநின்ற*
*புண்ணியங்காள், தீவினைகாள் திருவே நீங்கள் (6 திருவாரூர் 1)*

*என்றும்,*

*பொய்விரா மேனி தன்னை பொருளெனக் காலம் போக்கி*

*(6. திருச்சோற்றுத்துறை 1)*

*என்றும் கூறுகிறார்.*

*"உலகம் மாயை, மாயை பொய்ப் பொருள்" என்றும், ஆதலால் உலகம் பொய்தோற்றம் என்றும் இதனால் செவ்வனே விளக்கப்பட்டிருக்கிறது.*

**வினா : - இன்னும் எவற்றில் விளக்கப்பட்டிருக்கிறது?**

**விடை : -** *மாணிக்கவாசகர் திருவாசகத்தில்*

*மாய வாழ்க்கையை மெய்யென்றெண்ணி*
*மதித்திடா வகை நல்கினான். (சென்னிப்பத்து 5)*

*என்றும்*

*திருமந்திரத்தில்*

*ஆயும் பொய்ம் மாயை யகம்புறமாய் நிற்கும்*

*(8 தந்திரம் பராவத்தை 7)*

*என்றும்*

*அருணகிரிநாதர் திருப்புகழில்*

*"பொய்மாயையில் உழல்வேனை"*

*என்றும்*

*தாயுமானவர் பாடலில்*

*சகம் பொய்யெனத் தம்பட்டம் அடியே*

*என்றும் அத்துவைத வேதாந்த சித்தாந்தம் முரசறையப்பட்டிருக்கிறது.*

*(தொடரும்)*

# ஸ்ரீ ஜயதேவரும் அவர் அருளிச் செய்த கீத கோவிந்தமும்

*பாகம்-2*

## ஸ்ரீ நாராயணதீர்த்தரும் அவர் அருளிச் செய்த ஸ்ரீ கிருஷ்ணலீலா தரங்கிணியும்

*43. நம்முடைய வேதங்கள், புராணங்களுக்கும், உபநிஷதங்களுக்கும் ஆதாரமாக உள்ளன. புராணங்கள் காவ்யங்களும், கவிதைகளும் தோன்றுவதை ஊக்குவிக்கின்றன. பலிபீடம், யக்ஞம், அக்னி கார்யங்கள்) செய்வது எல்லாம் ப்ரக்ருதி - புருஷன் என்ற இரண்டு தத்துவத்தை அடிப்படையாகக் கொண்டவையே. நமது திருமணங்களில் தம்பதிகளின் நலன்குறித்து ஓதப்படும் வேதமந்திரங்கள் எல்லாம் தாய்மை அடைவது, புத்திர உற்பத்தி என்ற புனிதமான நிகழ்வுகளுக்கு ஆசி வழங்குபவைகளாகவே இருக்கின்றன. 'ஆத்மாவை புத்ர நாமாஸி ப்ரஜாமனு ப்ரஜாயஸே' என்று விவாஹ சமயம் செய்யப்படும் சேக்ஷ ஹோமத்தில் சொல்லப்படும் மந்திரங்கள். கணவன் -மனைவி தங்களுடைய குழந்தைகளிடத்தில் மறுபிறப்பு அடைகிறார்கள் என்ற கருத்தை ப்ரதான ஹோமத்தில் வடு, ஹோமம்,போது கீழ்க்கண்டவாறு மந்திரங்கள் ஓதப்படுகின்றன. 'இந்திரனே! இந்த வதுவிற்கு பத்து பிள்ளைகள் பிறக்கும்படி அருள் செய். கணவனை பதினோறாவது புத்திரனாகப் பாவித்து அன்பை வழங்கட்டும்.' என்று ப்ரார்த்திக்கப்படுகிறது. வேத மந்திரங்களால் சுத்திகரிக்கப்பட்ட மனத்துடன் இணையும் தம்பதிகள் பெறுவது ப்ரஹ்மானந்தத்தின் சிறு பிரதிபலிப்பே. இல்லற வாழ்க்கையில் தேடிச் செல்லும் மற்ற விஷயங்களால் ஏற்படும் சுகங்கள் நிலையற்றதே. நம்மில் அந்தர்யாமியாய் இருக்கும் சுத்த ஸத்வமான பரமாத்மவ ஸ்வரூபத்தை உள்நோக்கி மனனம் முதலிய ஒன்பது ஸாதனங்களால் செலுத்தும்போது ஏற்படும் ஆனந்தம் ஸாமீப்யம், ஸாரூப்யம், ஸாயுஜ்யம் என்ற நான்கு நிலைகளில் அடையப்படுகிறது. கோபிகைகள் ப்ருந்தாவனத்தில் (ஸாலோகம்) ஸ்ரீ கிருஷ்ணன் ஸமீபத்தில் (ஸாமீப்யம்) அவனுடைய ரூப, லாவண்யத்தில் ஈடுபட்டு ஸாரூப்யம், ராஸ, க்ரீடையில் மனம் லயம் அடைந்து (ஸாயுஜ்யம்) ஏற்பட்ட பரம ஆனந்தமே இவை. வெளிநோக்கிச் செல்லும் எண்ணங்களுக்கும், வாஸனைகளால் நினைவுகளுக்கும், அப்பாற்பட்டவை. இந்த அனுபவம் ஸ்ரீ நாரதரின் பக்தி ஸூத்ரம் 21ல்- எவ்விதம் கோகுலத்துச் கோபிகைகளுக்கு பக்தி இருந்ததோ அப்படி பக்தி செய்ய வேண்டும் என்று பக்திக்கு உதாரணமாகக் கூறப்பட்டுள்ளது. வேத வ்யாஸரும், இந்த பாகவத ஸர்கத்தை சுத்த மனதுடன் பாராயணம் செய்பவர்களுக்கும், கேட்பவர்களுக்கும் விகாரமான எண்ணங்கள், துர்வாஸனை நீங்கப் பெற்றவர்களாக, சுத்த மனோபாவத்தை அடைகிறார்கள் என்று பலஸ்ருதியில் சொல்வதே இதன் மேன்மைக்கு தக்க சான்றாகும். (பாகவத் ஸ்க. 10. அத்யா.33- ஸ்லோக.40)*

# ஸனாதன தர்மம் : கேள்வி பதில்கள்

ரா ஸ்ரீ

**53. கேள்வி :** ராமாயணம் என்று எது சொல்லப்படுகிறது?

**பதில் :** வால்மீகி முனிவரால் 24000 ஸ்லோகங்களில் மரியாதைக்குரிய புருஷோத்தம ராமனின் லீலைகள் எந்த நூலில் விரித்துச் சொல்லப்பட்டுள்ளதோ அது ராமாயணம் எனப்படும். மேலும் சில ராமாயணங்களும் உள்ளன. அத்புத, அத்யாத்ம, ஆனந்த, அக்னிவேஸ்ய ஸம்வர்த போன்றவை.

**54. கேள்வி :** மகாபாரதம் என்பது என்ன?

**பதில் :** பழமையான தர்மங்களை எல்லாம் சொல்லக்கூடிய இதிஹாஸத்திற்கு மகாபாரதம் என்று பெயர். இதில் கதாரூபமாக கௌரவர்களின் கதையுடன் சொல்லப்பட்டிருக்கும்.

**55. கேள்வி :** மகாபாரததின் விவரனம் என்ன ?

**பதில் :** இதில் 18 பர்வங்கள் உள்ளன. ஒரு லக்ஷம் ஸ்லோகங்கள் கொண்டது. ஆதி, ஸபா, வன, விராட, உத்யோக, பீஷ்ம, த்ரோண, கர்ண, சல்ய, சௌப்திக, ஸ்த்ரீ, சாந்தி, அனுசாஸன, அஸ்வமேதிக, ஆஸ்ரமவாஸிக, முஸல, மஹா ப்ரஸ்தானிக, ஸ்வர்காரோஹண என்று 18 பர்வங்கள்.

**56. கேள்வி :** ஸனாதன தர்மத்தில் தர்மங்கள் குறித்த நிபந்தன க்ரந்தங்கள் யாவை ?

**பதில் :** நிர்ணயஸிந்து, தர்மஸிந்து, ஸ்ம்ருதி சந்த்ரிகா, தாயாபாகம், சதுர்வர்க சிந்தாமணி, வீரமித்ரோதயம், ஸ்ம்ருதி முக்தாபலம், க்ருத்யஸார ஸமுச்சயம், சூத்ர கமலாகாரம் முதலியன.

**57. கேள்வி :** குண்டமண்டபங்கள் குறித்து செய்யப்பட்ட நூல்கள் யாவை?

**பதில் :** சுல்பஸூத்ரம், குண்ட மண்டல ஸித்தி, குண்ட விம்சதி, குண்டகல்பதரு, குண்டமுக்தாவளி.

**58. கேள்வி :** 14 (ஸதுர்தச வித்யை) வித்யைகளின் பெயர் என்ன?

**பதில் :** நாலு வேதங்கள், ஆறு அங்கங்கள்,ந ாலு உபாங்கங்களாக 14 வித்யை எனப்படும்.